# ப்ரார்த்தனா

Savitri
B H A V A N
ஆய்வுக் குறிப்புக்கள் எண். 21

ப்ரார்த்தனா அச்சிட்டு வெளியிடுபவர் : சாவித்ரி பவன், ஆரோவில்

**சாவித்ரி பவன்**
ஆரோவில் 605 101
தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி: 0091 (0)413 2622922
மின்அஞ்சல்: savitribhavan@auroville.org.in
www.auroville.org/index/savitribhavan.htm

இவ்வெளியீடு ஸ்ரீஅரபிந்தோ பன்னாட்டு கல்வி ஆராய்ச்சி மையத்தின் (*SAIIER*) நிதியுதவியினால் பிரசுரிக்கப்படுகிறது.

*This publication has been funded by SAIIER*
*(Sri Aurobindo International Institute of Educational Research)*

இப்புத்தகத்தில் வெளியிடப்பட்டுள்ள புகைப்படங்கள், ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை ஆகியோரின் வாசகங்களை மறுபதிப்பு செய்ய அனுமதித்த ஸ்ரீ அரபிந்தோ ஆசிரம அறக்கட்டளை மற்றும் அறங்காவலர் ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றி

ஆங்கில இதழாசிரியர் ஷ்ரத்தாவன்
தமிழில் தனலட்சுமி, சாவித்ரி பவனுக்காக

வடிவமைப்பு : ப்ரிஸ்மா, ஆரோவில், prisma@auroville.org.in

அச்சிட்டோர் : ஆல் இந்தியா பிரஸ், பாண்டிச்சேரி

பிப்ரவரி 2014

# பொருளடக்கம்


சத்யவான் கற்ற கல்வி ........................................................................ 4
பிரேமா நந்தகுமார்

சாவித்ரி - பன்முகச்சித்திரம் - 1 ........................................................ 10
சு. புவனசுந்தரி, ஆரோவில்

கடவுள் கீழிறங்கி வந்தான் அந்த வீழ்ச்சியினால்
உயர்ந்துபட்டான் ................................................................... 22
அரபிந்த பாசு

சாவித்ரி விளக்கம் ............................................................................ 37
ஷ்ரத்தாவன்


சாவித்ரிபவன் செய்திகள் .................................................................. 55

*One had returned from the transcendent planes*
*And bore anew the load of mortal breath,*
*Who had striven of old with our darkness and our pain;*
*She took again her divine unfinished task:*
*Survivor of death and the aeonic years,*
*Once more with her fathomless heart she fronted Time.*

*Savitri, p.353*

**பரிபூரணத்தின் தளங்களுக்குச் சென்ற ஒருத்தி, மீண்டும் திரும்பி வந்து,**
**மானுடச் சுவாசத்தினுடைய சுமையைப் புதிதாகத் தாங்கி நின்றாள்.**
**நமது இருட்டுடனும், நமது வேதனையுடனும்**
**பழங்காலத்தில் உழைத்து உழன்ற அவள்,**
**தன்னுடைய இறைமையான, நிறைவடையாத பணியை மீண்டும் ஏற்றாள்.**
**மரணத்தையும், ஊழிக் காலங்களையும் கடந்து பிழைத்த அவள் -**
**மீண்டும் தன்னுடைய ஆழம் காணாத இதயத்துடன்**
**காலத்தை எதிர்கொண்டு நின்றாள்.**

**ப. 93-94**



# சத்யவான் கற்ற கல்வி

பிரேமா நந்தகுமார்

*சாவித்ரி மாத்ர தேச ராஜதானியில் வளர்ந்தவள். அவள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினாள் என்று அறிகிறோம். அவளது அபூர்வமான அறிவாற்றலைக் கண்டு ஆண்மக்கள் வியந்து அவளை நெருங்கவும் அஞ்சினார்கள் என்றும், இதன் காரணமாக அவளை மணப்பதற்கு ஒருவரும் முன்வரவில்லை என்றும் சொல்லப்படுகிறது. ஸ்ரீஅரவிந்தரும் இவ்வாறே தனது சாவித்ரி மகாகாவியத்தில் எழுதியிருக்கிறார். இவர்கள் ஒருவருமே சாமானியர் அல்லர். ஆயினும் சாவித்ரியின் அருகிலே இவர்கள் நிற்க முடியாதவர்கள். அவள் அப்படியொரு அறிவுப் பிரகாசத்துடன் ஒளிர்ந்தாள். சோர்வில்லாத செயற்பாடு, அசைக்கமுடியாத தன்னம்பிக்கை, வருங்காலத்தை கணிக்கக்கூடிய அவளுடைய தொலைநோக்கு, உயர்ந்த சிந்தனைகளில் சதா ஈடுபட்டிருத்தல் என்று எதிலுமே அவர்களால் அவளுக்குச் சரியாக வாழ்ந்து காட்ட முடியாதவர்கள். அவளிடம் அருகில் வந்து பழகக் கூடியவர்களோ அவளைத் தெய்வமாகக் கண்டனர். அவளை பூஜைக்குரிய தெய்வச்சிலையாக வணங்கினர் என்று ஸ்ரீஅரவிந்தர் எழுதுகிறார். அவளது சக்தியை உணர்ந்தார்கள், அவளது ஒளியில் தங்கள் இருள் மாய்வதை புரிந்து கொண்டார்கள். அதனால் அவளது சேவகர்களாக இருக்க ஆசைப்பட்டார்களேயன்றி அவளது கணவனாக வேண்டும் என்று கனவிலும் ஆசைப்படவில்லை.*

*இப்படி மிகச் சிறப்பாக சாவித்ரியை ஸ்ரீஅரவிந்தர் வர்ணிக்கும் போது நமக்குப் புல்லரிக்கின்றது. இப்படியொரு பெண்மணியைக் கண்டதும் ஆச்சரியமுடன அவளிடம் பேசி தன் காதலையும் தெரியப்படுத்தும் இளைஞனே சத்யவான். அவளும் அவனை ஆர்வமுடன், காதலுடன் ஏற்றுக் கொள்கிறாள். அவளோ சாமானியப் பெண் அல்ல. சத்யவானிடம் சாவித்ரி கண்டதென்ன? காட்டில் வளர்ந்தவன். ஏழ்மையின் தோழன். விறகு வெட்டிப் பிழைப்பவன். அவனை அவள் கண்டு, காதல் கொண்டதற்கு, மனிதனை தெயவீகமாக்கும் இயற்கையின் மடியில் சத்யவான் பெற்ற கல்வியே காரணம் என்று மிகச் சிறப்பாக ஸ்ரீஅரவிந்தர் எடுத்துச் சொல்வதை சற்று சிந்திப்போம்.*

அன்பு எனும் பனுவல் (Book of Love) இதில் மூன்று காண்டங்கள். இவற்றில் முதல் காண்டம், சந்திப்பதற்கு ஏற்பட்ட இடம் எனும் தலைப்பில் இருக்கிறது. இந்த இடத்தின் வர்ணனையே சத்யவான் கல்வி கற்ற பல்கலைக்கழகம் இதுதான் என்று தெரிவிக்கிறது. காட்டின் இப்பகுதியை விதி நிர்ணயித்த தேசம் என்று ஸ்ரீஅரவிந்தர் கூறுகிறார்.

"பசுமையும் மகிழ்ச்சியுமான தடையற்ற
ஓர் உயர்ந்த உலகம் இது.
அங்கு இளவேனிலும் முதுவேனிலும்
சுகானுபவத்துடன் போட்டி இட்டன.
யார் அரசு செய்வது என்று நகைப்புடன் சிரித்திட,
எதிர்பார்ப்பு அங்கே சிறகினை விரித்தது."[1]

இங்கு மரகதக் காடுகள், முத்துமாலை போன்ற நீரோடைகள், மலர்களை ஊடுருவும் மந்தமாருதம், சித்திரம் போல் அசையாமல் நிற்கும் வெள்ளைக் கொக்கு, காட்டிற்கு ஆபரணங்களாக மயில், கிளி, புறாக்கள் செய்யும் மெல்லிய ஓசைகள். இங்கு வசந்தமும் வேனிற்காலமும் இணைந்து இருக்கின்றனவாம். யார் கை உயர்ந்திருக்கிறது என்று பேச்சுப் போட்டி வேறு! வருங்காலத்தில் ஒரு மாபெரும் மாறுதலை உலகம் அமைதியாக எதிர்பார்ப்பது போன்ற நிலை.

"அனைத்திற்கும் பின்னே இயற்கையின் கம்பீர அமைதி,
ஆதிகாலத்து சமாதான நிலை அங்கு இருந்தது.
அதனால் மிருகங்களும் பறவைகளும் சச்சரவிடவில்லை.
ஆழ்ந்து சிந்தித்து செயற்படும் மனிதன்
இந்த இனிய அசேதனத்தை கலக்கவில்லை.
அங்கு சிந்தனை இல்லை, அதன் செயற்பாடும் இல்லை.
இலட்சியத்துடன் பிணங்கும் வாழ்க்கை இல்லை.
ஆதி பராசக்தி அங்கே நிம்மதியாக இருந்தாள்.
அனைத்துமே அவளிட்ட முதல் திட்டம் தான்.
உலகளாவிய மகிழ்ச்சி பெருகிட, மரங்கள் யாவும்
அற்புத வண்ணங்களாய் பசுமையுடன் பொலிந்தன." [1]

இங்கு ஒரு மக்கியமான செய்தி சொல்லப்படுகிறது. இங்கே மனிதன் துயரம், வலி பற்றி கவலைப்படவில்லையாம். நாகரீகம்

அறிந்தவர்கள் என்று நம்மை நாமே புகழ்ந்து கொள்கிறோம். ஆனால் அனவரதமும் கவலையே வாழ்வாக நாட்களைக் கடத்துகிறோம். அதிகாலையில் எழுந்ததிலிருந்து கவலைதான். அனைவருக்கும் அவரவர் சக்திக்கு ஏற்ற கவலைகள். பழமொழி சொல்வதுண்டு. குடுமிக்குப் பூ இல்லையே என்று அழுபவனுக்கும் கஞ்சிக்கு உப்பு இல்லையே என்று வாடுபவனுக்கும் வித்தியாசமில்லை. இருவருமே வாழ்க்கை எனும் கடலை அனுபவிக்கவில்லை. கவலைப்பட்டுக் கொண்டே இருப்பதுதான் வாழ்க்கை என்று இருப்பவர்களுக்கு வாழ்க்கையில் நிம்மதி ஏது? இங்கு நாம் காணும் காட்டில் அதுபோன்ற கவலைகள் ஏதுமின்றி மக்கள் வாழ்கிறார்கள்.

இப்படி ஒரு சூழலில் வளர்வதே நல்ல கல்விதான். சாவித்ரி சத்யவானை முதலில் காணும்போது இறைவனின் வேல்போன்று நிமிர்ந்த, உயர்ந்த உருவத்தைக் கண்டாளாம். கண்டவுடன் மற்றவருக்கு சத்யவான் ஓர் ஆற்றலின் உருவகமாகத் திகழ்ந்ததெப்படி? இயற்கையுடன் ஒன்றி வளரும்போது வைத்தியர்களிடம் மருந்து ஏற்பது, கண்ணிற்கு கண்ணாடி, முதுகில் கூன் என எதற்கும் வாய்ப்பில்லையே! சூரிய ஒளிக்கும் கொட்டும் மழைக்கும் நடுங்காத உடல்வாகு. தனிமையில் இன்பம் கண்டு, காலார நடந்து மறைகளை மனனம் செய்தவன். பாரதியார் தனிமையில் தான் பெற்ற இன்பம் பற்றிப் பாடுவார். தனிமையிலே ஒரு சாரமிருக்குதம்மா என்பார்.

வேதங்களில் இயற்கை வர்ணனை நிரம்ப உண்டு. அவற்றில் சிலவற்றை ஸ்ரீஅரவிந்தர் தெள்ளிய ஆங்கிலத்தில் தந்திருக்கிறார். ஒரு சில வர்ணனைகளை எம்.ஆர்.ஜம்புநாதன் அவர்களது தமிழில் காண்போம். காடு (ஆரண்யம்) பற்றிய வர்ணனை ஒன்றில் காட்டினை அரண்யானி எனும் தேவதையாக வர்ணித்து ஒரு ரிஷி பாடுகிறார்.

"அங்கு பசுக்கள் மேயுங்கால் காடு மனையைப் போல் தோன்றுகிறது. மாலையிலே அரண்யானி, சகடங்களை இனி வேண்டாம் என நீக்கிவிட்டவள் போல் தோன்றுகிறாள்.

வனத்தின் தேவியே! இங்கு ஒருவன் தன் பசுவை அழைக்கிறான். வேறு ஒருவன் மரத்தை வெட்டுகிறான். மாலையிலே வனத்தில் வசிப்பவன் பறவைகளுடைய, மிருகங்களுடைய சத்தத்தைக் கேட்டு, ஏதோ திருடர்களுடைய குரல் எனப் பயமாகி சஞ்சலமாகிறான்.

வனம் எவனையும் துன்புறுத்தாது. ஆனால் வேறு எதுவோ, எவனோ அவனை எதிர்க்கலாம். அங்கு வசிப்பவன் விருப்பம் போல் இனிய பழத்தைப் புசித்து அங்கு சுற்றுகிறான்.

நான் கஸ்தூரி மணமுள்ளவளும், சுகந்தமாயிருப்பவளும், பல பழம் முதலியவற்றை ஏந்துபவளும், பயிரிடப்படாதவளும், மிருகங்களின் தாயுமான அரண்யானியைப் போற்றுகிறேன்."

இவ்விதமாக இயற்கையின் மடியில் வளர்ந்த சத்யவான் சாவித்ரியின் மனத்தைக் கொள்ளை கொண்டதில் வியப்பில்லைதானே! அற்புதமான இயற்கையின் பின்னணியில் சத்யவானை சாவித்ரி கண்டது போல் காண்போம்:

"இயற்கையின் பின்னணியில் ஓர் ஆன்மா
உயிர்ப்பின் சக்தியால் வாழ்வு பெற்று
கனவுலகின் வீட்டில் ஒரு கணம் நிற்பதே போல்
பசுமைக்கும் பொன் கிரணத்திற்கும் நடுவே
அடவியின் ஓரத்தில் அவன் தோன்றினான்.
வாழும் ஒளியே ஓராயுதமாய் உருக்கொண்டாற்போல்
உயர்ந்து, நிமிர்ந்து கடவுளின் வேல் போல வந்தான்,
அவன் உருவம் காலை நேர ஒளியை வழி நடத்தியது." [1]

இயற்கை செதுக்கிய மனிதச் சிற்பத்தில் தெய்வீகம் இயற்கையாகவே பொலிகிறது. சாவித்ரி கண்டு ஆச்சரியப்படுகிறாள். செயற்கைத்தனம் ஏதுமில்லாத இளம் தபஸ்வி. காட்டில் வாழ்பவனது உருவத்தில் அரசகளை பொலிகிறது. இளம் கன்னியின் மனத்திற்கு இசைந்த காதலன் உருவமும் அதில் இணைந்திருக்கிறது. அவன் நடந்து வரும்போதே அவனுள் பொதிந்த ஆற்றல், மற்றும் ஆனந்தம், பொங்கி வரும் நடமாடும் சிலையாக அவனைத் தோற்றுவிக்கிறதாம். காட்டின் விளிம்பினுக்கே ஒளி பாய்ச்சும் மாவீரனோ? ஒளி சிந்தி வரும் சாவித்ரிக்கு சமமான நாயகன்.

பாரதத்தின் இதிஹாச காப்பியங்களான இராமாயணம், மகாபாரதம் இரண்டிலும் தோன்றும் நாயக நாயகியர் ஒருவருக்கு ஒருவர் ஆற்றலில் சளைத்தவர்களல்ல. இராமன், சீதை எனும் இணையர் போன்று பலர். சீதை, தமயந்தி, திரௌபதி, சாவித்ரி, உத்தரை, குந்தி என்று பட்டியல் நீளும். வீரம், நட்பு, நேர்மை என எதிலும் உயர்ந்த நிலைகளைப் பிடித்தவர்கள். அதனால் சத்யவானும் அப்படியொரு கதாநாயகன் என்பதை ஸ்ரீஅரவிந்தர் உணர்ந்தவரே. காடுகளில்தான்

மனிதன் தன்னடக்கத்துடன், எப்பொழுதும் விழிப்புடன் இருக்கப் பழகுகிறான், அதனால் அவனது புத்தி கூர்மை அடைகிறது என்பது அவர் எண்ணம். இலட்சியவாதிகள் தனிமையில் தங்களது இலட்சியங்கள் நிறைவுற பாடுபடுகிறார்கள் என்று அவர் அனுபவத்தில் கண்டறிந்து அதற்காகவே பவானி மந்திர் எனும் ஓர் இயக்கத்திற்கு அடிகோலினார். காட்டின் நடுவில் பவானிக்கொரு கோயில் நிறுவ வேண்டும், அதில் இலட்சியவாதிகள் தன்னலம் மறந்து பிறருக்காக, நாட்டுக்காக, பாடுபட வேண்டும் என்று அவர் சொல்லியிருக்கிறார்.

காட்டில் வளர்ந்த சத்யவான் காட்டுமிராண்டி அல்ல. டார்ஜான் போன்ற மேலை நாட்டு உருவகங்களால் கலைந்து போன நமது இலட்சியங்களை மீட்டுருவாக்கம் செய்வதற்காகவே சத்யவானை கதாநாயகனாகத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார். பாரதத்தின் பண்டைய பண்பாடு அரணியங்களில் களைத்த தபோவனங்கள், அங்கே கற்பிக்கப்பட்ட வீரம், பொறுமை, ஈகை, அன்பு, வைராக்கியம் இவை யாவுமே சத்யவானின் பாத்திரத்தில் காண்கிறோம். இது வர்ணனையால் மட்டும் தெரிவதல்ல. ஸ்ரீஅரவிந்தர் மகாபாரதத்தில் பின்னொரு சமயம் சத்யவான் தைரியமாக, தன் தந்தையிடமே வாதாடும் விவரத்தை மனத்தில் ஏற்று சத்யவானின் பாத்திரத்தை வடித்திருக்கிறார்.

மகாபாரதத்தில் சாந்தி பர்வம். சத்யவான் உயிரை சாவித்ரி மீட்டபின் அனைவரும் சால்வ இராச்சியத்திற்கு வந்துவிட்டனர். த்யூமத்சேனர் மீண்டும் அரசராகி செங்கோலோச்சிக் கொண்டிருக்கிறார். அரசரின் திருவோலக்கத்தில் மந்திரிமார்களும் அரசகுமாரனான சத்யவானும் அமர்ந்திருக்கறான். அவன் நாள் தோறும் இப்படி உன்னிப்பாக கவனித்தால்தானே நாளை நல்ல அரசனாக விளங்க முடியும்? காவலர் சில குற்றவாளிகளை அழைத்து வருகின்றனர். அவர்கள் எந்த மன்னிப்புக்கும் தண்டனைக்கும் அடங்காத குற்றங்களைச் செய்தவர்கள். அரசன் தீர விசாரிக்கிறான். சற்று யோசனை செய்த பின் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கிறான்.

மரண தண்டனை அளிப்பது சரியல்ல என்று சத்யவான் சொல்கிறான். கசையடி போன்ற எத்தனையோ தண்டனைகள் இருக்கின்றனவே! அவற்றுக்கெல்லாம் பயப்படாதவர்களுக்கு மரண தண்டனைதான் சரி என்று அரசன் சொல்கிறான். இது பாரதத்தில் வழிவழியாக வந்த அறமல்ல என்று சத்யவான் அழுத்தமாகச் சொல்கிறான். நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே எனும்

பாரதப் பண்பாடு இருக்கும்பொழுது பயமில்லைதான். ஆனால் த்யூமத்சேனர் நெற்றிக்கண் காட்டவில்லை. மெள்ளமெள்ள தண்டனை தருவதின் நோக்கம், தண்டனை தருவது எப்படித் தொடங்கியது என எல்லாவற்றையும் விளக்குகிறார். சத்யவான் மரியாதையுடன் அவர் சொல்வதெல்லாம் கேட்டுக் கொள்கிறான். ஆயினும் "ந மூல காத கர்தவ்யோ நைஷ தர்ம ஸநாதன:" (ஒருவனை அடியோடு இல்லாமல் செய்வது பண்டைய அறமல்ல) நம்மைப் படைத்த கடவுளருளிய சாசனம் (தாத்ரு சாசனம்) இதுவே என்கிறான். வேதியராயினும், எக்குலத்தவராயினும் தவறு செய்தவனுக்கு தண்டனை தரவேண்டியதே, ஆனால் எந்த காலத்திலும் மரண தண்டனை கூடாது என்பதவன் வாதம். மகராஜா த்யூமத்சேனரோ சில குற்றங்களில் மரண தண்டனை தவிர்க்க முடியாதது என்கிறார். அப்படிப்பட்ட குற்றவாளிகளை அரசரே மாற்றி அமைத்திட தவம் செய்ய வேண்டும் என்கிறான் சத்யவான். இந்த உரையாடல் இந்த அளவில் முற்றுப் பெறுகிறது.

காட்டில் வளர்ந்தாலும் வாழ்வியல் சிந்தனைகளில் சத்யவான் தோய்ந்திருக்கிறான் என்பதை இது காட்டுகிறது. இயற்கையுடன் ஒருங்கிணைந்து, அதே சமயம் தபஸ்விகளுடன் ஒருங்கிணைந்து அஹிம்சா பரமோ தர்ம என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறான். குற்றவாளிகளைத் திருத்த முடியாவிட்டால் அரசனே அதற்கான தவம் செய்ய வேண்டும் என்று த்யூமத்சேனனிடம் கூறுவது மனிதர்களுக்கு நல்வழிகாட்ட அரசன் மனிதனாக இருந்தால் போதாது, மாமனிதனாக விளங்க வேண்டும் என்பதே. இதை மனதில் கொண்டு ஸ்ரீஅரவிந்தர் அசுவபதி எனும் அரசன் தவத்தால் தெய்வீகம் பெற்றது பற்றி சாவித்ரி காவியத்தில் விளக்கமாக எழுதியிருப்பதை நாம் அறிவோம்.

இயற்கையிடம் நல்ல அணுகுமுறை, பெரியோர்களிடம் பண்பாட்டின் வழி கல்வி கற்றல், போரிலாயினும் அரசனது திருவோலக்கமாயினும் பயமின்றி தைரியமாக உண்மைக்காகவும், பொதுமக்கள் நன்மைக்காகவும் பேசுவது, அதற்கான செய்கையில் ஈடுபடுதல் என்று ஓர் இலட்சிய மனிதனை சத்யவான் கற்ற கல்வி நமக்கு முன்னுதாரணமாகத் தருகிறது. இப்படியொரு கதாநாயகனுக்கு நம்மை அறிமுகப்படுத்திய ஸ்ரீஅரவிந்தருக்கு கைம்மாறு செய்வதுண்டோ?

---

[1] கட்டுரையில் சாவித்ரி காவியத்திலிருந்து எடுத்தாளப்பட்டிருக்கின்ற வரிகளை மொழியாக்கம் செய்தவர் ஸ்ரீமதி பத்மாசனி.

# சாவித்ரி – பன்முகச்சித்திரம் – 1

சு. புவனசுந்தரி, ஆரோவில்

*ப்ரார்த்தனா இதழ் எண் 17ல் சாவித்ரி அவதாரத்தின் அவசியம் பற்றியும் அதற்காக மன்னர் அஸ்வபதி ஆற்றிய தவம் பற்றியும் பார்த்தோம். இனி நாம், தெய்வீக அன்னை வரமருளியபடியே சாவித்ரியாக ஜனனமெடுத்து, வளர்ந்து, இறுதியில் தன் பணியை நிறைவேற்றுவதை ஒவ்வொன்றாகப் பார்க்கவிருக்கிறோம். இவ்விதழில் நாம் விரிவாகக் காணப் போவது புத்தகம் நான்கின் முதற் காண்டத்தை மட்டுமே.*

*பகவான் சாவித்ரியைக் காவியமாக வடிக்க எடுத்துக் கொண்டது, அது காட்டும் மறைபொருளாகிய "அமரத்துவத்தை உலகிற்குக் கொணர முடியும்" அதாவது, மனிதவினத்திற்கு மேற்பட்ட இனம் ஒன்று உலகில் வந்து, மரணத்தை வென்று, இறைமையை உலகில் நிலைநாட்ட முடியும் என்பதை எடுத்துரைக்கவே. காவியத் தலைவி சாவித்ரி என்பது நாம் அறிந்ததே. இக்கட்டுரைகளில் காவியத்தலைவிக்குரிய லட்சணங்களை பகவான் எங்ஙனம் வரைந்துள்ளார் என்பதைக் காட்டுவதே என் நோக்கம். ஊடே, காவியநயத்தையும் நாம் ரசிக்கக் கூடுமாயின், இக்காவியம் எத்துணை சிறப்பு வாய்ந்தது என்றும் அறிந்து இருமடங்கு இன்பத்தையும், பயனையும் பெற இயலுமன்றோ!*

*மனிதர்களுக்கு புற அழகும் அக அழகும் ஒருசேர அமைவது அருமையிலும் அருமை. இந்த இரண்டோடு அகவலிமையும், திண்மையும் சேர்ந்திருக்கப்பெறின் அவர்களை உன்னதமானவர், உத்தமர், மகான், மகாத்மா என்றெல்லாம் அழைக்கிறோம். அரியனவற்றை (மனிதர்களால் செய்ய முடியாதவற்றை) செய்து முடிப்போரை அவதாரம் எனப் போற்றித் துதிக்கிறோம். மகாவிஷ்ணு உலக நன்மை வேண்டி எடுத்த அவதாரங்கள் பெரிதும் போற்றப்படுகின்றன. பரிணாம வளர்ச்சியைக் காட்டுபவையாகவும் அமைந்துள்ளன என்பதையும் காண்கிறோம்.*

ஆயின் பகவானும் அன்னையும் மனித இனம்தான் பரிணாம வளர்ச்சியின் முடிந்த முடிவு என்று கருதவில்லை.

“எங்ஙனம் மண்ணிலிருந்து தாவரங்கள் வெளிப்போந்து
வந்தனவோ,
எங்ஙனம் விலங்கு வாழ்க்கையிலிருந்து சிந்திக்கும் ஆற்றல்
கொண்ட மனிதன் உருவானானோ,
அதே போல ஒரு கடவுட்தன்மை அவளுள் தோன்றியது”

என்று உரைப்பதிருப்பதின் மூலம் நாம் உணரக் கிடைக்கிறது. இந்த அவள் யார்?

வேதங்கள் காட்டும் முக்கியமான தெய்வங்களில் சூரியனும் ஒன்று. (பன்னிரண்டு சூரியன்கள் காட்டப்படுகிறார்கள்). சூரியன் இருளுக்குக் காரணமாகிறான், ஆயின் ஒளியைத் தருகிறான், சர்வ ஜீவராசிகளுக்கும் சக்தி அளித்து, சோம்பலைப் போக்கி, நோயை விரட்டி அவற்றை இயங்க வைக்கிறான். விடியலுக்கு சற்று முன்பாகக் காணப்படுவது இவனின் அம்சமாகிய “சவித்ரு”. (தெய்வீக அன்னை) சவித்ருவின் அம்சமே சாவித்ரி. மன்னர் அசுவபதி தன் தவத்தினூடே பல உலகங்களுக்கு செல்கிறார், பல உண்மைகளையும் அறிகிறார். இறுதியில் தெய்வீக அன்னையின் தரிசனம் பெறுகிறார். அவளிடம் இம்மன்பதை உய்வுற அவள் அவதாரம் எடுத்து வரவேண்டுமென கோரிக்கையும் விடுக்கிறார். அன்னையும் முதலில் மறுப்பினும் இறுதியில் சம்மதிக்கிறாள். இது ஸ்ரீஅரவிந்தர் தம் யோகவாழ்க்கையில் “அதிமன இறக்கம் பூமியின் மீது சாத்தியமே” எனக் கண்டது. நம் அன்னை அவர்களும் இதே உணர்வினை அடைந்துள்ளார்கள்; அதனைத் தம் “பிரார்த்தனைகளும் தியானங்களும்” என்ற குறிப்புகளில் ஆவணப்படுத்தியும் உள்ளார்கள்:

“பரமேஸ்வரித் தாயே, தெய்வ அன்னையே.......உணர்வின் எல்லாப் படிகளும் ஒன்றன் பின் ஒன்றாக உள்ள உலகங்களும் தோன்றின. சில அற்புதமாக, பிரகாசமுடையவையாக, ஒழுங்குடையவையாக, தெளிவாக இருந்தன: அங்கு ஞானம் ஒளி வீசுவதாய் இருந்தது, வெளிப்பாடு இசைமையுடனும் விசாலமாகவும் இருந்தது, இச்சாசக்தி சக்தி வாய்ந்ததாய் வெல்ல முடியாததாய் இருந்தது. பின்னர் உலகங்கள் அதிகமதிகமாய்

குழம்பிய பன்மையில் இருண்டன, ஆற்றல் கடுமையாகியது. சடவுலகம் இருளும் துயரமும் நிறைந்ததாயிற்று. எங்களுடைய அளவற்ற அன்பில் துன்பமும் அஞ்ஞானமும் நிறைந்த உலகின் சகிக்க முடியாத துயரத்தை மொத்தமாகக் கண்டபோது, தங்களுடைய உண்மையான குறிக்கோளை விட்டு விலகிய சக்திகளால் நமது குழந்தைகள் ஒருவர் மீது ஒருவர் எறியப்பட்டு, பயங்கரப் போராட்டத்தில் சிக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்த போது, இறைவனின் அன்புஒளி வெளிப்பட வேண்டும், பைத்தியம் பிடித்துப் போன இந்த வஸ்துக்களின் மத்தியில் அது திருவுருமாற்றம் செய்யும் சக்தியாக வேலை செய்ய வேண்டுமென நாங்கள் தீவிரமாக சங்கற்பித்தோம். அதன்பின் எங்கள் சங்கற்பம் இன்னும் அதிக சக்தி வாய்ந்ததாகவும் பயன் கொடுக்கக் கூடியதாகவும் இருப்பதற்காக, வாக்கும் மனமும் கடந்த பரமனே, நாங்கள் நின்னை நோக்கித் திரும்பி நின் உதவிக்காக இறைஞ்சினோம். அப்பொழுது அறியப்படாத பொருளின் அளந்தறியாத ஆழங்களிலிருந்து வெல்ல முடியாத, உன்னதமான பதிலொன்று வந்தது, அப்போது நாங்கள் பூவுலகு காப்பாற்றப்பட்டது என்பதை அறிந்து கொண்டோம்”

*(செப்.1 1914- பிரார்த்தனை)*

பகவான் முதற் காண்டமாகிய “சங்கேத வைகறை”யிலேயே இவளின் சிறப்புகளைப் பலவாறு பேசுகிறார். அனேகமாக சாவித்ரியைப் பற்றிக் கூறவரும் இடங்களிலெல்லாம் இவளின் எழிலினை, மாண்பினை எடுத்துரைக்கத் தவறவேயில்லை. எனினும் தனிப் பெருமையளிக்கும் வகையில், மன்னரின் தவத்துக்குப் பரிசாக சாவித்ரி அவதாரம் நிகழ்வதை ஆரம்பமாகக் கொண்டு காவியத்தின் இரண்டாம் பகுதியை எழுதத் தொடங்குகிறார். எத்துணை மாண்பு!

மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இருக்கும் சாவித்ரி காவியத்தின், பகுதி இரண்டில் புத்தகம் நான்கின் முதலிரு காண்டங்கள் அவதாரத்தின் தோற்றம், மழலைப் பருவம், வளர்ச்சி, (தந்தையால் மணவாளனைத் தேட இயலாத) எழில்மிகு மங்கையாகக் காட்சியளித்தல் என வடிவமைக்கப்பட்டுள்ளன. அதனை படிக்குந்தோறும் ஏதோ நம் வீடுகளிலேயே, நம் கண்ணெதிரேயே சாவித்ரி என்ற அற்புதப் பிறவி பிறந்து வளர்வதாக உணர்கிறோம், அனுபவிக்கிறோம், ஆனந்தப்படுகிறோம். இதோ விரிகிறது அந்த அற்புதக் காட்சிகள்:

அவதாரம் வந்துதிக்க வேண்டுமெனில், அதற்காக எல்லாமே, ஜடப்பொருளும் கூட ஆயத்தப்பட வேண்டுமல்லவா? முதலில் காலமானது தயாராகிறது. அவதாரம் நேரும் பருவகாலம் முதலில் படம் பிடித்துக் காட்டப்படுகிறது பகவானால்.

"இப்போது புவியின் இயல்பு மாறியது அவள் தாலாட்டில் ஓய்வெடுத்தாள்,
காலஓரைகள் மெதுவே திருப்தியுற்றவாறே கடந்தேகின:
அகன்ற நீளமைதியில் தோய்ந்த காற்று உலைவிலா நிலையை நினைவுகூர்ந்தது,
அகிலம் ஓர் ஆனந்தக் கதிரோனின் தோழனாகியது
இறைவனின் நெருக்கமே போன்றதோர் தெளிவமைதி அருகியது,
ஆழ்ந்த ஆய்வுகொள் சுழுத்தியின் ஒளிரேகை விண்ணையும் மண்ணையும் ஒளியூட்டியது
கண்டுணர்வொன்றும் ஆனந்தப் பரவசமொன்றும்
தியானத்தில் ஆழ்ந்திருந்த தனியோர் இதயத்தை நிரப்பின.
வெளியின் ஓர் ஊமைநெஞ்சமதில் கனவொன்று இடையிடையே தங்கித் திரிந்தது,
காலமானது தனது கொண்டாட்டத்தின் மாடங்களைத் திறந்தது,
ஆர்வ மிகுதியும் நம்பிக்கையும் நுழைந்தன:
உம்பருலகின் உச்சங்களை தனித்தன்மையொன்று உற்று நோக்கியது,
மறைக்கப்பட்டிருந்த அனலொன்றை உள்ளார் நினைவு தூண்டி விட்டது
காணப்படா கதிரவனை உள்நோக்கு துதி செய்தது.
நினைவு கூரத்தக்க மூன்று பருவகாலங்கள் ஒளியோடு நடையிட்டுச் சென்றன
சூல்கொண்ட மணித்துளிகளை ஒன்றன்பின் ஒன்றாக அலகிட்டவாறே
ஒளியின் அடியாழத்தே ஒளிந்திருந்த ஓர் அனற்பிழம்பை விழிப்போடு
வீறுகொண்ட ஏதோவொரு பிறப்பு வரப்போவதை கூர்ந்து நோக்கின".

அவதார காலம் எது தெரியுமா? வசந்த காலம். நம்மை பரவசப்படுத்தும் ருது வசந்த ருது. உயிர்களுக்கு ஆனந்தம் ஊட்டி, படைப்பிற்கு ஏதுவானவற்றை அனைத்துயிர்களுக்கும் அளிப்பவன் அல்லவா வசந்தன்! அவன் வரும் அழகை வடிவாகக் காட்டும் வசந்தகால வர்ணனை, பகவானின் வார்த்தைகளில்: (அழகின் முழுவீச்சையும் நாம் கற்பனை செய்து பார்க்க இவ்வரிகளைத் தவிர வேறேதும் தேவையில்லை. சாவித்ரியை அதன் இலக்கியநயத்திற்காக படிக்க விரும்புவர்களுக்காகவும்).

"பின்னர் வசந்தம், ஓர் ஆர்வமிகு காதலன், இலைகளின்
வழியே குதித்தனன்
நிலமாகிய மணமகளைத் தன் ஆவல்கொண்ட கரங்களினால்
தழுவினன்
அவனது வருகை வானவில்லின் வண்ணங்களை
வடித்தெடுத்த தீ
அவனது கரங்கள் களிப்பின் வருகையது சுழலும் ஒரு சக்கரம்.
மீயுயர்வு கொண்ட கோளத்தினை நோக்கி விடுக்கின்ற குரல்
அவனுடைத்து
அந்த அவனது இரகசிய ஸ்பர்ஸம் நமது மானுட
வாழ்வுகளின் மேல்
பூவுலகை உருவாக்கிய சிலிர்ப்பதனை எப்போழ்தும்
புதிதாகவே வைத்துளது
ஒரு பழமை வாய்ந்த இனிமையதை புதிய வடிவங்களாக
மறுபடி வடிவமைக்கின்றது
மரணம், காலம் இவற்றால் மாற்றமடையாதபடி ஒருசேரக்
காக்கின்றது
இயற்கைதனின் கவர்ச்சிக்கு நமது இதயங்கள் அளிக்கின்ற
பதில்
பழைய களிப்பூட்டலுக்கு எப்போதும் விழித்தெழுகின்ற
துடிப்பும் எப்போதும் புதியதாகவே வைத்திருக்கும்,ஆயின்
இன்னமும் மாறாத ஒன்றாக
அழகும் ஆனந்தபரவசமும் வாழ்வதற்கான களிப்பும்
அமைந்ததாக.
அவனது விஜயம் மாயாஜாலத்தை மந்திரஆற்றலைக்
கொணர்ந்தது

வாழ்வின் தளர்ந்த இதயத்தில் அவனது தொடுதல்
மகிழ்வையும், புத்துணர்ச்சியையும் வளரச்செய்தது
அவளின் நெஞ்சகத்தில் அவன் களிப்பினை வலிந்த
ஆர்வத்துடன் பிணைந்த கைதியாக்கினான்.
இயற்கையின் அவயவங்களில் அவனது அணைப்பு
முதிராதவோர் இறையின் தன்மையுடைத்து
அவனது பேரார்வத்தினால் மாற்றப்பட்ட இறையார்ந்த
வெளிப்படுதல்
அவனது முத்தத்தினால் இயற்கையின் உடலினை
அழகாக்கியது.
கொண்டாட்டத்திற்கு அமைதியற்ற தன்மையில் ஆர்வமுற்று
அவன் வந்தான்.
உயர்வான குழலோசை குயிலின் ஆனந்தக் கூவலில்,
அவனது மயிற்பீலி கொள் தலைப்பாகை மரங்களில்
படர்ந்தவாறு
புளகாங்கிதத்திற்கான இதமான விடுப்பாக அவனது சுவாசம்,
அவனது நீலமணிக்கண்களின் நோக்கு இன்பக்
களியாட்டார்வம்.
ஒரு மென்மையான தெய்வீக உந்து அவா இயற்தூண்டுதல்
பொதிந்த
இறைவனது புலனறிவுசார் களிப்புகள் உணர்வினை
மலைப்பூட்டி
அழகினில் வெளிப்பட்டது, ஓர் இலயப்போக்கு பரவியது
வாழ்க்கையின் ஆனந்த அச்சமூட்டும் பாங்கினை
வலியுறுத்தியவாறே:
விரைந்தேகும் கணங்களை அமரத்துவத்தின் இயக்கங்கள்
தொட்டன.
உணர்வின் அழுத்தம் பொதிந்த ஓர் இறைத்தன்மை
சுவாசத்தைக் கூட ஓர் உணர்வார்வம் கொண்ட
இனிமையாக்கியது
அனைத்துக் காட்சிகளும் குரலோசைகளும் ஒன்றேயான
கவர்ச்சியை நெய்தன.
மகிழ்வூட்டப் பெற்ற உலகின் வாழ்வானது
இனிமை, ஒளி மற்றும் இசையால் திண்மையுறப் பெற்றது,
ஆரவாரக் களிப்பாலும், வண்ணங்களாலும் மகிழ்ச்சியான
விழாவாகியது,

ஒளிரேகைகளின் துதிப்பாடலாகவும், களிமிகு
கூவல்களினால் புனிதமான சடங்காகவும்
ஆழ்உணர்வு கொண்ட புரோகிதத் தன்மையுடை
கூட்டுப்பாடல் பாடியதாகவும்
மரங்களின் மேல் தூபக்கால்கள் ஆடிவருவதே போல்
ஒரு புனிதமான நறுமணம் அக்காலத்தை நிரப்பியது.
இரத்தச் சிவப்பு வண்ணத்தால் அசோகமரம் நெருப்பென
ஒளிர்ந்தது,
கறைபடா ஆர்வமொன்றின் சுவாசம் போல்
தூய்மையானதாக
வெள்ளை மல்லிகைகள் மயங்க வைக்கின்ற காற்றினை
சூறையாடின,
வெளிறிய மாம்பூக்கள் காதலினால் மயங்கிய குயிலதன்
உருகியோடும் கூவலுக்கு இரையூட்டின, அரக்கு வண்ணம்
கொள் தேனீ
தேன் பொதிந்த வாசமிகு மலர்மொட்டுக்களின் நடுவே
ரீங்காரமிட்டது.
மாபெரும் இறையோனவன் தங்கமுறுவலே போன்றிருந்தது
கதிரவனொளி.
அனைத்து இயற்கையுமே அழகுக் கொண்டாட்டத்தின்
பிடியில்."

நம் கண்களுக்கெதிரே வசந்தகாலம் தன் அழகினையெல்லாம் காட்டி நிற்கின்றதல்லவா? அழகுக்கெல்லாம் அழகு செய்வதே போல் இதோ அவதாரம் நிகழ்ந்து விட்டது.

பிறந்தவுடன் அஞ்ஞான இருளில் தாலாட்டப்பட்ட போதிலும், அருள், பெருமிதம் இவற்றின் இல்லமாகக் காணப்பட்ட மாத்ரா தேசத்தில் இனி வரப்போகும் காணவியலா இறை சக்திகளைக் காந்தம் போல் கவர்ந்திழுக்கும் ஆற்றல் கொண்ட சாவித்ரியை ஆதிகாலம் தொட்டு விளங்கும் மாபெரும் கடவுட்சக்திகள் பேணிக் காக்கின்றன. விரைவிலேயே ஆன்மாவை தெய்வீகத்துடன் இணைக்கும் கண்ணியானது வளரத் தொடங்குகிறது. வளர்ந்து மலர்ந்து தனது உம்பருலக உயர்வினை எட்டுகிறது.

"அந்த விதையானது வளர்ந்து ம்ருதுவான பேரெழில்கொள்
மொட்டானது

அம்மொட்டு அருந்திறல் வாய்ந்த சுவர்க்கத்தின் மலர்ச்சியை
வெளிக்காட்டியது."

சாவித்ரியின் ஆழ்மனதோடு இயற்கையின் ஞானம் கூட்டுறவு கொள்கிறது. சாதாரண மனிதர்களுக்கிடையே வளர்ந்து வந்த போதிலும் தனித்துவம் கொண்டு விளங்குகிறாள். பகவான் சிறுவயதிலேயே இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டதன் காரணமாக இந்தியக் கலாச்சாரத்தை, அதன் இலக்கியங்களை இந்தியா வரும் வரை அறியாதவராய் இருப்பினும், இங்கு வந்த பிறகு அவற்றின் பெருமைகளை, மாண்புகளை உணர்ந்து, சமஸ்கிருத மொழியை ஐயந்திரிபுறக் கற்றுக் கொண்டார். வேதங்களையும், உபநிஷத்துக்களையும் உய்த்துணர்ந்தார் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அதனை தன் சாவித்ரி காவியத்திலும் எடுத்துக் காட்டி நம்மை மகிழ்விக்கிறார். இங்கே சாவித்ரியின் தனித் தன்மைதனை, தெய்வீகத்துடன் ஒளிர்கின்ற சாவித்ரியை பகவான் முண்டோக உபநிஷத்தில் காணப்படும் ஓர் உவமை மூலம் சுட்டிக் காட்டுகிறார்.

"த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமானம் வ்ருக்ஷம் பரிஷஸ்
வஜாதே
தயோரன்ய: பிப்பலம் ஸ்வாத்-வத்-யனச் னந்-நன்யோ அபிசாக
சீதி"
(முண்டோகபநிஷத்- மூன்றாவது- முதல் ஸ்லோகம்)

"அழகிய சிறகுடைய பக்ஷிகள் இரண்டு இணை பிரியாதவை, சமமான அந்தஸ்து உடையவை. ஸமானமாக ஒரே மரத்தை இருப்பிடமாகக் கொண்டவை. அவற்றுள் ஒன்று சுவையான பழங்களை உண்கிறது, மற்றதோவெனின் உண்ணாமல் பார்த்துக் கொண்டு இருக்கிறது."
இது உபநிஷதம்.

இனி பகவானின் வாக்கியங்கள்:

"அவளின் உள்ளார்ந்த பண்பு தனித்துவம் கொண்டு மிக்க
வலிவொடு வாழ்ந்திருந்தது

அற்புத வண்ணங்கள் பொருந்திய மார்பினைக் கொண்டு
திகழ்ந்த

இடைத்தங்கலாக கனிநிறை கிளைகளுக்கிடையே
இரகசியமாய் வந்தந்தஅதிசயமான பறவை போல்"

பகவான் இந்தியாவின் பண்டைய ரிஷிகள் இறைதத்துவத்தை வடித்துத் தந்துள்ள வேதங்களையும், உபநிஷத்துக்களையும் முற்றிலுமாக உய்த்துணர்ந்து, தக்க இடத்தில் சிறப்பான உவமானமாக நமக்குக் காட்டியிருப்பதை என்னவென்று உரைப்பது?

சாவித்ரி வளர்ந்து வருகிறாள். யாராலும் அறியப்படாதவொன்றை, எல்லையற்ற பரம்பொருளின் அடிவானங்களை மனிதர்களுடைய கண்களுக்குப் புலப்படுத்துகிறாள் தனதிருப்பின் மூலம்.

"மிக்க இணக்கத்தோடு அவள் பூமியில் உம்பருலகை முத்திரையிட்டாள்"

இந்த இடத்தில் நமக்கு நினைவுக்கு வருவது, புத்தகம்-3 காண்டம் 2 "தெய்வீக அன்னைக்கு வந்தனம்" எனும் காண்டத்தில்

"அவளே பொன்மயப் பாலம், அற்புதத் தீப்பிழம்பு" எனும் வரியே.

ஆக மிக இளம் பருவத்திலேயே சாவித்ரி தெய்வீகத்தன்மை கொண்டவளாக, மானுட உடலெடுத்து வந்த இறையின் திருஅவதாரமாக நமக்குக் காட்சி தருகிறாள்.

சாதாரணமாக, ஒரு குழந்தை வளர வளர, அது தன்னைச் சுற்றி உள்ளவர்களைப் பார்த்துப் பலவற்றையும் கற்றுக் கொள்கிறது. ஆனால் பல சமயங்களில் எத்தனையோ குழந்தைகள் பிறக்கும் போது பல சிறப்புதன்மைகளைப் பெற்றிருந்த போதிலும் வளர வளர, தமது தனிப்பட்ட குணநலன்களை அல்லது சிறப்புத் தன்மைகளை இழந்து விடுவதை நாம் கவனிக்கிறோம். அனேகமாக பெற்றோர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் குழந்தைகளாகவே ஆகிவிடுகின்றனர்/ஆக்கப்பட்டு விடுகின்றனர். ஆயின் நம் சாவித்ரி மாறுபட்டு இருக்கிறாள். வளரும் பருவத்தே சடவுலகத்தைக் காப்பாற்ற வந்துள்ளதை உணர்ந்தவளாய், இயலுலகினோடு கலந்து விடாமல், சடவுலகில் தன்னை இழந்து விடாதவளாய் இருக்கிறாள்.

"அவள் பூவுலகின் நெருக்கத்தினை சந்திக்கவேண்டிப் பணிய
நேரிடினும்

*அவளின் ஜீவன் தன் கடவுட்தன்மைதனை தக்கவே*
*வைத்திருந்தது*
*அது பணிந்து சென்ற போதினும் சடத்தின்*
*ஆளுமைக்காட்படவில்லை"*

எல்லாக் குழந்தைகளையும் போலத் தோற்றமளித்த சாவித்ரி அவளோடு உறைந்த தெய்வீக ஒளியால் எவ்வாறு புறவுலகச் செய்திகளைக் காண்கிறாள், இதோ பகவானின் வரிகளில்:

*"அவளின் உள்ளுறை சக்தி வடிவங்களை வெளிப்பார்வைக்கு*
*அப்பாற்பட்டதோர் ஆழ்பார்வைதனுக்கேற்ப காணுமாறு*
*புலன்களை வடிவமைத்தது.*
*காணவியலா சூரியஒளியொன்று அவள் நாளங்களில் ஓடி(யது)*
*சுவர்க்கத்தின் அறிவாற்றல்களால் அவளின் அறிவின்*
*இருப்பிடத்தை மூழ்கடித்தது*
*அதனால் இவ்வுலகு அறிந்துள்ளதை விட ஆழ்காட்சிகளுக்கு*
*விழிப்புறச் செய்தது.*
*அவ்வொளியின் கபடற்ற தன்மையால்*
*உருவரையிடப்பட்டதனால்அவளின் பொங்கிப்பெருகும்*
*குழந்தைத்தனமான எண்ணங்கள் மிகச் செப்பமுடன்*
*அவளான்மாவின் ஆழ்உண்மைகளுக்கேற்ப பிரகாசமிக்க*
*வடிவுருக்களாகத் திருப்பப்பட்டன,*
*அவளது விழிகளிலிருந்து மாறுபட்டதோர் பார்வை வெளிப்*
*போந்தது*
*சூழ்ந்திருந்த அனைத்தின் மீதும் அறியாமை கொண்ட*
*மானிடப் பார்வை போலின்றி."*

உலகில் வாழும் எல்லோரும் தம்மைத்தான் அறிவார்கள், உணர்வார்கள். இதற்குச் சாதாரண மனிதர்கள் யாரும் விதிவிலக்கல்ல. நம்மால், நம்மை வைத்துத்தான் பிறவற்றை அளவிட முடியும். அதற்குக் காரணம் நம் பார்வையும், தன்னைத் தவிர பிறர் அன்னியர் என்ற மனோபாவமும், மனிதர்களைத் தவிர மற்றவை உயிரற்றவை எனக் கருதுவதே. ஆயின் அவதார புருஷர்களுக்கோ உலகே இறைவன்தான், உலகப் பொருட்கள் அனைத்தும் இறைவனவன் வடிவந்தான். அதனால் தான் வீதியில் சென்ற வண்டிமாட்டின் முதுகில் பட்ட அடிகள் பகவான்

இராமகிருஷ்ணரின் மேல் வீழ, அவர் துன்பமுற்றார், வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வள்ளலார் வாடினார். பிட்டுக்கு மண் சுமக்க வந்த பெருமான் முதுகில் ஆணவம் கொண்ட பாண்டிய மன்னன் அடித்த அடி உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளின் மேலும் வீழ்ந்தது. அதே போல சாவித்ரியும் வாழ்வில் அனைத்தையுமே, தன்னின் பகுதியாக உணர்கிறாள். ஏனெனில் ***அனைத்து உயர்இயற்கையும்*** அவளே. உணர்வின் தன்மை இது ஒரு புறமிக்க,

*"ஓர் ஒளி கொண் மனம், ஒத்திசைவுநயம் கொண் வாழ்க்கை சக்தி.*
*தெய்வீகத்தினை உள்ளடக்கிப் பொதிந்து வைத்த ஓர் உடல்*
*வெளிப்பட்டுத் தோன்றப் போகும் இறைதனை உருவாக்கின"*

என மனம், வாழ்க்கை, உடல் போன்ற மனிதனுக்குரிய பகுதிகள் வளர்ந்து வரும் அக்குழந்தையிடம் அமைந்திருந்த விதத்தினை பகவான் எடுத்துரைக்கிறார். வளர் பருவத்தே விரைந்தேகும் நாட்கள் இன்பம் நிறைந்ததாக அமைந்தன. இதனை பகவான் முதற் புத்தகத்தின் இரண்டாம் காண்டம் "பிரச்னை"யிலும் நமக்குக் காட்டியுள்ளார்:

*" .....அவள் உள்ளம் இன்று பல வடிவுடைய இறந்த காலந்தனிலே*
*நினைந்து நினைந்து உலவலானது............*
*அவள்தன் வாழ்வின் பெருவழிப்பாட்டைகளும் அவற்றின் இனிய*
*கிளைவழிப்பாதைகளும் அவள்தன் தெள்ளிய ஒளிமிகு பார்வையில்;*
*ஒரு வரைபடம் போன்று பதிவுறலாயின*
*கிள்ளைப் பருவம் ஒரு பொலிவுறு நாடென மன்னும் இளமை*
*நீல வரைகளாய் பரந்த சுவர்க்கப் பொழில்களும் மற்றும்......"*
*(பிரச்னை)*

இனி, அகத்தன்மை

தனது மோனத்தின் வலிமையினால் தற்காப்புச் செய்யப்பட்டவளாய் இருந்த அவளது ஏகாந்த இருப்பு

*கண்கூடாகத் தெரிந்தது. வானில் எத்தனையோ நட்சத்திரங்கள் ஒளிர்ந்தாலும் ஒரு நிலவுக்கு ஈடாகுமா? அது போன்று மாத்ரா அரண்மனைதனில் சாவித்ரி வளர்பிறை நிலவு போல வளர்ந்து வருகிறாள். அவளது ஜீவனுடைய பேரார்வம் உயர்மெய்ம்மையின் சிங்காதனத்தை பாதுகாக்கும் உயர் ஊழ்விதியைக் கீழே இறங்கி வருமாறு அழைத்தவண்ணம் இருந்தது. சுவர்க்கத்தின் ஓடையைப் போன்று அவளுள் பெருமிதம், களிப்பு, அன்பு என இவையனைத்தும் அவள் வாழ்வில் சங்கமமாகி நின்றன. இக்காண்டத்தின் இறுதி வரிகள் நம் கண்முன்னே சாவித்ரி என்ற அருட்சுடரை ஓர் எழிலார் ஓவியமாக வடித்துக் காட்டுகின்றன என்றால் அது மிகையில்லை. பகவானின் எழுத்ததனை மொழிபெயர்ப்பு செய்தால் எங்கே அப்பெருமானார் காட்ட வந்த சாவித்ரியை சிதைத்து விடுவேனோ என்ற அச்சமதனால் ஆங்கில மூல வரிகளையே உங்களுக்கு அளிக்கிறேன்.*

Its charm recalled things seen in vision's hours,
A golden bridge spanning a faery flood,
A moon-touched palm-tree single by a lake
Companion of the wide and glimmering peace,
A murmur as of leaves in Paradise
Moving when feet of the Immortals pass,
A fiery halo over sleeping hills,
A strange and starry head alone in Night.

*அன்பர்களே, தெய்வீக அன்னை மாத்ரா அரண்மனையில் சாவித்ரியாக அவதாரமெடுத்து மழலையாக (5-6 வயதிற்கு உட்பட்ட பருவம் மழலைப் பருவம்) காட்சி தரும் இக்காண்டத்தைப் படிக்கும் போது, நம்மிடையே தோன்றி அருள் பாலிக்க / பாலித்து வரும் நம் அன்னை அவர்களின் குழந்தைப் பருவத்தையும் நாம் நினைவு கூர்வோமெனின், இவ்வர்ணனைகள் ஒன்று விடாமல் அவர்களுக்கும் பொருந்தி வருவதை உணர முடியும். அன்னை அவர்களின் சிறு வயதுச் சம்பவங்களை மறுபடி எடுத்து படித்து, ஒப்பிட்டுப் பார்த்து இன்புற வேண்டுகின்றேன்.*

*சாவித்ரி வளர்வாள்...*

# கடவுள் கீழிறங்கி வந்தான்
# அந்த வீழ்ச்சியினால் உயர்ந்துபட்டான்

(திரு.அரபிந்த பாசு ஆகஸ்ட் 9, 1998 இல் சாவித்ரி பவனில் ஆற்றிய உரையின் தமிழாக்கம்)

*அன்னையின் குழந்தைகளே, இக்காலைப் பொழுதில் நான் உங்களிடையே ஸ்ரீ அரவிந்தரின் மகா காவியமான சாவித்ரியில் இடம் பெற்றுள்ள ஒரே ஒரு வரியைப் பற்றி மட்டும் பேச இருக்கிறேன். இவ்வரி சாவித்ரி காவியத்தின் நூல் மூன்று காதை நான்கு* "The Vision and the Boon" *இல் இடம் பெறுகிறது.*

This strange irrational product of the mire,
This compromise between the beast and god,
Is not the crown of thy miraculous world.
I know there shall inform the inconscient cells,
At one with Nature and at height with heaven,
A spirit vast as the containing sky
And swept with ecstasy from invisible founts,
A god come down and greater by the fall. p.343

*ஜடத்தினுடைய சேற்றில் இருந்து உருவாக்கப்பட்ட விந்தையான,*
*அறிவுக்குப் புறம்பான பொருளாக இருக்கின்றான்.*
*அவன் - மிருகத்திற்கும், கடவுளுக்கும் இடைப்பட்ட நிலையொன்றைத்*
*தனது உதயமூலமாகக் கொண்டுள்ளான்.*
*இவன் - உனது அற்புதமான உலகினுடைய மணிமகுடம் அல்ல என்பது*
*எனக்குத் தெரியும்.*
*அவனுடைய உணர்வுநிலையானது விரிவடைந்து ஒரு நாள்*
*பிரபஞ்சத்தின் வியாபகத்தைக் கைக்கொள்ளும்*
*அவனுடைய உணர்வற்ற உயிரணுக்களானவை,*

இயற்கையினுடன் ஒன்றி நின்று, சுவர்க்கத்தின உயரத்திற்கு வளர்ந்து
உயர்ந்து,
வானத்தைப் போன்ற விரிவு கொண்ட ஒரு ஜீவனுடைய
உணர்வினால் ஒளியூட்டப்படும்.
பார்வைக்குப் புலனாகாத நீரூற்றுக்களில் இருந்து பொங்கிப்
பிரவாகிக்கும்
பேரின்பத்தின் வெள்ள வீச்சினால் நனைந்து ததும்பும்.
மனிதன் - வீழ்ச்சியினால், உயர்தகைமை கொண்டு
பரிணாமம் பெறவெனக் கீழிறங்கி வந்த ஒரு கடவுள். ப.74-75

இதில் கடைசி வரி மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தது. இவ்வரி ஆன்மிக வரலாற்றை முழுவதும் தலைகீழாகப் புரட்டிப் போட்ட ஒன்று என எனக்குத் தோன்றுகிறது. இவ்வரியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆன்மிக நோக்கம் இதற்கு முன் எப்பொழுதுமே சொல்லப்படவில்லை. இக்காலைப் பொழுதில் இதை நான் உங்களுக்கு விளக்க முயற்சிக்கிறேன்:

A god come down and greater by the fall..

ஆன்மிகம் முழுவதிலுமே மனிதனை ஒரு கீழான, வீழ்ந்துபட்ட சிருஷ்டி எனவே வலியுறுத்திக் கூறுகிறது. மனிதர்கள் கடவுள் அல்லது பிரம்மன் அல்லது வேறு எங்கிருந்து வருகிறார்களோ அங்கேயே மீண்டும் செல்கிறார்கள் எனும் கொள்கையைப் பின்பற்றுவதே இதற்குக் காரணம். உன்னுடைய மூலத்துடன் மீண்டும் ஒன்று சேர்ந்துவிட வேண்டும் என்பதே. அனைத்து ஆன்மிகப் பாதைகளும் இதைத்தான் வலியுறுத்துகின்றன.

ஆனால் ஸ்ரீஅரவிந்தரோ இறைவன் இங்கு கீழிறங்கி வருவதாகக் குறிப்பிடுகிறார். இறைவன் வேண்டுமென்றே இதைச் செய்தார் என எனக்குத் தோன்றுகிறது. மேலும் நாம் வேண்டுமென்றே விருப்பத்துடன் நம்முடைய மூலமான பரமனிடமிருந்து இவ்வாறு கீழிறங்கி வந்திருக்கலாம் எனும் அபிப்ராயத்தையும் இது நமக்குத் தருகிறது. இது ஏன்? நாம் இவ்வாறு கீழிறங்கி வந்ததனால் எவ்வாறு மேலும் உயர்ந்தோம்? இந்த வீழ்ச்சி நம்மை மேலும் உயர்த்தியது, ஏனெனில் நாம் ஆற்றல் மிக்கவர்களாக ஆனோம் என ஸ்ரீஅரவிந்தர் சொல்வது போன்று இருக்கிறது. அதனால் நாம் இங்கு வந்தது மூலத்துடன் இணைவதற்காக அல்ல. ஆனால்

ஏதோ ஒன்றைச் செய்வதற்காகவே நாம் இங்கு வந்திருக்கிறோம். இது முற்றிலும் புத்துணர்வு தருவதாக, உண்மையானதாக இருக்கிறது. நம்முடைய உயர்வு, நாம் விழுவதற்கு முன் என்னவாக இருந்தோமோ அதாக ஆவது அல்ல, ஆனால் இப்புவியில் ஏதோ ஒன்றைச் செய்வதற்காக ஏற்பட்டிருக்கிறது. எனக்குத் தெரிந்த வரை எந்த ஆன்மிகப் பாதையிலோ அல்லது தத்துவத்திலோ அல்லது யோக மார்க்கத்திலோ இவ்வாறு சொல்லப்படவில்லை.

இக்கருத்தினை சாவித்ரியின் முதல் காதையிலேயே ஸ்ரீஅரவிந்தர் சொல்கிறார். மனித ஊழினால் இறைத்தன்மை மேலும் உயர்கிறது - இங்கும் உயர்வு எனும் சொல்லை உபயோகிக்கிறார். அதனை மனிதனுடைய விதியோடு தொடர்புபடுத்துகிறார். கடவுள் மனிதனாக ஆனதால் உயர்ந்தான், அதிக ஆற்றலுடையவனான்.

ஆனாலும் அனைத்து யோகங்களும் மனிதனை மனிதனாகவே இருந்துவிட வேண்டும் என வற்புறுத்துவதில்லை. அதனுடைய இலட்சியம் மனித நிலையைவிட உயர்வது, அதிமனிதனாக ஆவது. நாம் எவ்வாறு இந்த இரு கருத்துக்களையும் ஒன்று சேர்க்க முடியும்? அனைத்திலும் அந்த ஒருவனே வதிகிறான் என நாம் உணராதவரை நம்மால் அதிமனத்தை அடைய முடியாது என்கிறார் ஸ்ரீஅரவிந்தர். அதிமனத்தை அடையாத வரை நம்மால் இப்புவி வாழ்வை மாற்ற முடியாது. எனவே இக்கருத்துக்கள் அனைத்தும் இங்கு ஒன்று சேர்க்கப்பட்டிருக்கின்றன. சாவித்ரியின் இவ்வரி நாம் வீழ்வதால் மேலும் உயர்கிறோம் என்பதை நமக்கு உணர்த்துகிறது. ஏனெனில் இந்த வீழ்ச்சியே முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று, அதற்கு ஒரு பொருள் இருக்கிறது, ஒரு நோக்கம் இருக்கிறது, இத்தகைய உயர்வு அந்த உயர் உலகில் இல்லை, மிக உயர்ந்த உலகில் கூட இல்லை. இது ஒரு சவாலான கூற்றுதான்.

இவ்வரி எந்த இடத்தில் வருகிறது எனப் பார்ப்போம். I know there shall inform the inconscient cells, இவ்வுயரும் தன்மை அதிமன உலகில் அல்ல, ஆனால் இங்கு, இப்புவியில், இவ்வுடலில், அழியக் கூடிய தூல உடலாகிய சட்டத்தில் உள்ள செல்களில், அசேதனத்தில் ஆழ்ந்துள்ள செல்களில் உள்ளது. இயற்கையோடு ஒன்றி அதே சமயம் உயர் உலகின் உயர் தளங்களுக்கு உயர்கிறது. இது நம்மை இயற்கையிலிருந்து விடுபடச் சொல்லவில்லை, சொர்க்கத்தையும் விட்டுவிட வேண்டியதில்லை. ஆனால் இவையிரண்டையும் இந்த

அசேதன செல்களில், அறியாமை மிக்க உடல் அணுக்களில் ஒன்று சேர்த்து அதனை மிக உயர்ந்ததாக ஆக்குவதேயாகும்.

"நம்முடைய சொர்க்க இல்லத்தினின்று நாமே நம்மை வெளியேற்றிக் கொண்டு வாழ்கிறோம்" (We live self-exiled from our heavenlier home." (p.262) என்கிறார் ஸ்ரீஅரவிந்தர். சாதாரணமான அபிப்ராயம் என்னவென்றால் கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படியாத காரணத்தினால் மனிதன் வீழ்ந்துபட்டான் என்பதே. அல்லது இந்து மதத்திலும், ஜைன மதத்திலும், புத்த மதத்திலும் நாம் நம்முடைய முந்தைய பிறவியின் கர்ம வினையைத் தீர்ப்பதற்காகவே பிறப்பெடுக்கிறோம் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. யூதர்கள் பாவங்களைப் பற்றிப் பேசுவதில்லை ஆனால் கிருத்துவமதம் மனிதர்களுடைய பாவங்களைப் பற்றிப் பேசுகிறது. பெருமிதம், இறுமாப்பு, கடவுளுக்கு கீழ்ப்படியாதது போன்ற காரணங்களுக்காக நாம் வீழ்ந்துபட்டோம் என்கிறது. ஆனால் இங்கோ இது போன்ற எந்தவிதமான காரணங்களும் இல்லை. நாம்தான் நம்முடைய சுயவிருப்பத்தின் பொருட்டு இங்கு வந்தோம். இதற்கு ஏதோ ஒரு பொருள் இருக்க வேண்டும். ஸ்ரீஅரவிந்தர் சொல்வது போல சிறுமை நிறைந்த தூல வாழ்வில், அறியாமையின் இருளில், பூரணமற்ற உடலிலும், மனதிலும் வாழ்வதற்கு யாரும் தம்மை விருப்பத்துடன் தெரிவு செய்து கொள்ளமாட்டார்கள்.

ஆம், இது மேன்மையற்றது, அவமதிப்பு கொண்டது, ஆனந்தம் அங்கில்லை, மகிழ்ச்சியில்லை. நாம் த்வந்தங்களினால் நிறைந்த உலகில் பிறந்திருக்கிறோம். ஆசை, துன்பம், தோல்வி, போன்றவற்றினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறோம். ஞானம் இழந்து அறியாமையிலும் துன்பத்திலும் ஆழ்ந்துவிடுகிறோம். இதுதான் நமது வாழ்க்கை. நாம் இங்கு வீழ்வதற்கு முன் எவ்வாறு உயர்வுடன் இருந்தோம்? இதற்கான பதிலை நாம் இக்காவியத்திலிருந்தே பெறலாம்.

கடவுள் பூரணமற்றவனா? இறைவன் பூரணமானவன் அவன் அங்கும் முழுமையாக இருக்கிறான் இங்கும் அதே முழுமையுடன் இருக்கிறான், முழுமையிலிருந்து சிறிது முழுமையைக் குறைத்தால் என்ன மிஞ்சும்? முழுமைதான் மிஞ்சும் என உபநிடதம் கூறுகிறது. அதனால் கடவுள் அவனளவில் முழுமையானவன், பூரணமானவன். ஆனாலும் ஸ்ரீஅரவிந்தர் "ஒரு கடவுள் இங்கு கீழே

விழுந்ததனால் மேலும் உயர்ந்தான்” எனத் துணிவுடன் கூறுகிறார். ஏனென்றால் கடவுள் குறிப்பிட்ட ஒரு காரணத்திற்காக ஜடத்தில் இறங்கினான்.

நமது பழங்கால இந்திய மரபில் மாயை என்றால் பூரணமற்ற ஞானம் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்திய ஆன்மிகத்தின் அடிப்படையில் சிருஷ்டியை மூன்று வகையாகப் பார்க்கலாம்: பிரகிருதி, மாயை, லீலை. சாக்கியத் தத்துவத்தின்படி பிரகிருதி என்றால் இயற்கையின் இருட்தன்மை, ஒரு சிருஷ்டிக்கும் ஆற்றல் கொண்டது ஆனால் முற்றிலும் உணர்வற்றது. மற்றொன்று புருஷன், தூய்மையான உணர்வு ஆனால் அசைவற்றது. ஆனால் பிரகிருதியோ ஆற்றல் மிக்கது ஆனால் உணர்வற்றது. நீங்கள் இப்புவியினை பிரகிருதியின் பரிணாம வளர்ச்சியாகப் பார்க்கலாம்.

பின் மாயை எனும் மற்றொரு கோட்பாடு, இவ்வுலகம் நிஜமானது அல்ல, மெய்யானது போல தோற்றம் அளிக்கும் ஒன்று. இத்தத்துவத்தின்படி, மேலும் அமெரிக்கர்கள் சொல்வது போன்று பிரம்மம் என்பது முற்றிலும் அசைவற்றது, அதற்கு சிருஷ்டிக்கும் ஆற்றல் இல்லை, அதற்கு உருவமோ, குணங்களோ இல்லை. அதனால் இவ்வுலகம் மாயை, இவ்வுலகம் என்ற ஒன்று இங்கு இருப்பது போலத் தோன்றினாலும் அது இங்கு இல்லை.

அனுபவத்தின் ஒரு நிலையில் இது உண்மையே. பூரணயோகத்தை கடைப்பிடிக்க முயற்சிப்பவர்களுக்குக் கூட இது ஏற்கத்தக்கதே. ஒவ்வொரு பூரணயோகியும் உடனடியாகவோ அல்லது சிலகாலம் கழித்தோ இத்தகைய அனுபவத்தைப் பெறுவார்கள் என ஸ்ரீஅரவிந்தர் கூறுகிறார். உன்னுடைய சாதனையின் போது இவ்வுலகம் என்பது முற்றிலும் மாயை என்பதை நீ உணர்வாய். நீ அவ்வாறு உணரும்போதுதான் நீ முழுவதுமாக பற்றற்றிருக்க இருக்க முடியும் என்கிறார்.

ஆனால் இது ஒரு முழுமையான அனுபவம் அல்ல. ஏனென்றால் நீ ஏதுமற்றது என்பதை எங்கு உணர்கிறாயோ, இறைவன் அங்குள்ள ஒவ்வொரு அணுவிலும் தன்னை நிறைப்பான் என்பதைக் காண்பாய். இதுதான் ஸ்ரீஅரவிந்தர் அலிப்பூர் சிறையில் பெற்ற வாசுதேவ தரிசனம். வாசுதேவம் சர்வம் இதி என்கிறது கீதை. வாசுதேவன் என்றால் அனைத்திலும் நிறைந்திருப்பவன், சர்வ வியாபி, பரிபூரணன். சர்வமும் வாசுதேவனே என அறிந்த ஓர் ஆன்மா

மிக மிக அரிதானது. ஆனால் ஸ்ரீஅரவிந்தர் அத்தகைய அரிதான ஓர் ஆன்மா. ஏனெனில் அவர் சிறையில் வாசுதேவனை ஒவ்வொரு மனிதனுள்ளும் ஒவ்வொன்றிலும் கண்டார். இந்த அனுபவம் அவருக்கு நிர்வாண அனுபவத்திற்குப் பின் அதாவது அனைத்தும் நிழலாக, மெய்யற்றதாக, நிழலுருவாக மிதந்து கொண்டிருப்பது போல் தோன்றிய அனுபவத்திற்குப்பின் ஏற்பட்டதாகச் சொல்கிறார். அத்தகைய நிர்வாண அனுபவத்திறகுப் பின் இந்த வாசுதேவ தரிசன அனுபவம் ஏற்பட்டது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த நிழலுருவங்கள் இயல்பானதாகவும் அதே சமயம் அதன் ஒவ்வொன்றினுள்ளும் மெய்மையைக் கண்டார்.

இவ்வாறாக நாம் பார்க்கும் பொழுது இப்பிரபஞ்சம் லீலை என அழைக்கப்படுகிறது - இது இறைவனின் ஆடல். அவனுடைய சுதந்திரமான செயல். கடவுள் சிருஷ்டிக்க வேண்டும் என வற்புறுத்தப்படவில்லை, அவன் தானே இங்கு வெளிப்பட வேண்டிய அவசியமும் இல்லை. அவன் தன்னுடைய ஆனந்தத்திற்காக இச்செயலைச் செய்தான். இந்த சிருஷ்டி ஒரு குழந்தையின் நடனம் என்கிறது பாகவத புராணம். குழந்தை தன்னுடைய நிழலைக் காண்பதற்காகவே நடனமாடுகிறது என்கிறது அப்புராணம். அது ஒரு நிழல்தான், ஆனால் ஒரு நிஜமான நிழல், ஓர் ஒளியின் நிழல். இந்த லீலைக்கு ஒரு காரணம் இருக்கிறது என இந்த லீலையின் நோக்கத்திற்கு மேலும் ஒரு விளக்கமளிக்கிறார் ஸ்ரீஅரவிந்தர். ஆம் நீ இதிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும், ஏனென்றால் நீ ஒரு சிறைக் கைதியைப் போன்று இருக்கிறாய். நீ இச்சிறையிலிருந்து வெளிவர வேண்டும், வெளியில் நின்று கொண்டு,"ஆம் நான் விடுபட்டுவிட்டேன் - என்ன அருமையான வாழ்க்கை இது!" எனச் சொல்ல வேண்டும். ஆனால் இந்த சிறைச் சாலை என்னாவது? நீ அதை அப்படியே விட்டுவிடுவாய், மற்ற சிறைக்கைதிகளையும் அவர்கள் தற்பொழுது இருக்கும் நிலையிலேயே பயனற்றதென்று விட்டுவிட்டு வந்துவிடுவாய். இது மிகவும் மனிதத்தன்மையற்ற செயல். இவ்வாறு விடுபடுதல் எனது நோக்கமானால் நான் மீண்டும் அச்சிறையினுள் சென்று அதை மாளிகையாக்குவது ஏன் கூடாது? இதுதான் இவ்வுலகில் இறைவனின் இலட்சியம்.

"அறியமுடியாததைத் தேடுதல்" (The Pursuit of the Unknowable) எனப்படும் இக்காதையில் அசுவபதி ஒரு விண்கலம் போன்று நேரடியாக அப்பூரணனை நோக்கிப் பயணிக்கிறார். இவ்வுலகம்

அபூரணமானதாக இருக்கிறது. இவ்வுலகில் வாழ்வதில் அர்த்தமில்லை எனத் தோன்றுகிறது. அவர் தன்னை உணரத் தலைப்படுகிறார், பின் அனைவருள்ளும் உறையும் அந்த பரமாத்மனைத் தேடவும் பரமனை அறியவும் விரும்புகிறார். அதனால் அவனை, அப்பரிபூரணனை உணரும் பொருட்டு உலகை மறக்கிறார், அதைத் துறக்கிறார். இதைப் பற்றியத் தேடலின் மிக விரிவான விளைவினை விவரிக்கிறார்:

Thought falls from us, we cease from joy and grief;
The ego is dead; we are freed from being and care,
We have done with birth and death and work and fate. p.310

எண்ணமானது நம்மிடம் இருந்து வீழ்ந்து படுகின்றது.
இன்பத்திடம் இருந்தும், துன்பத்திடம் இருந்தும்
நாம் நம்மை இழந்து விடுகின்றோம்.
அகந்தை மரணமடைகின்றது. நாம் இருத்தலில் இருந்தும்,
கவலையில் இருந்தும் விடுதலை பெறுகின்றோம்.
பிறப்பு, இறப்பு, வினைப்பாடு, விதி
இவை யாவற்றையும் நாம் விட்டொழிக்கின்றோம். ப.17

ஆனால் அன்னை அவரிடம் பேசுகிறார். நீ என்ன செய்கிறாய்? எங்கு போகிறாய்? அசுவபதி அறியாத பல பணிகள் அவர் செய்ய வேண்டியிருக்கிறது. அன்னை சொல்கிறாள்:

O soul, it is too early to rejoice!
Thou hast reached the boundless silence of the Self,
Thou hast leaped into a glad divine abyss;
But where hast thou thrown Self's mission and Self 's power?
p.310

ஆன்மாவே! நீ உவந்து மகிழ என உன்னுடைய வேளையானது இன்னும் வரவில்லையா?
ஆன்மாவானது, ஜீவனுடைய உரையற்ற
மௌனத்தைத்தான் எட்டியுற்றது.
ஆன்மாவானது —— உவகை கொண்ட இறை அமைதியின்
ஆழத்திற்குள்தான் தாண்டிக் குதித்துள்ளது.
ஆனால் ஜீவனுடைய புனிதமான நோக்கத்தையும்,
ஜீவனுடைய ஆற்றலையும் எங்கோ அது தூக்கி எறிந்துவிட்டது.
ப.18

*ஆனால் அந்த பரம ஆத்மனுக்கு ஒரு குறிக்கோள் இருக்கிறது. அக்குறிக்கோளை ஒரு மகத்தான ஆற்றலால்தான் நிறைவேற்ற முடியும்.*

But where hast thou thrown Self's mission and Self 's power?
On what dead bank on the Eternal.s road?
One was within thee who was self and world,
What hast thou done for his purpose in the stars? p.310

*ஆனால் ஜீவனுடைய புனிதமான நோக்கத்தையும்,*
*ஜீவனுடைய ஆற்றலையும் எங்கோ அது தூக்கி எறிந்துவிட்டது.*
*இறைமையின் சாலையில் எந்த*
*மரணித்துப்போன கரை மீது அதைத் தூக்கி எறிந்தது?*
*ஆன்மாவினுள் - ஜீவனாகவும், உலகமாகவும் இருக்கும்*
*ஒருவன் உள்ளார்ந்தவாறு உறைந்தான்.*
*ஆன்மாவானது, அவனுடைய குறிக்கோள் நிறைவேறவெனத்*
*தனது கோள்நிலைகளில் என்னதான் வினைப்பட்டுள்ளது? ப.18*

*விண்மீன்களும் கோள்களும் ஏதோ ஒரு நோக்கத்துடன்தான் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இது அன்னையின் அன்பான கண்டிப்பு: நீ எங்கே போகிறாய்? நீ என்ன செய்கிறாய்? அப்பரிபூரணத்தில் உன்னை இழந்துவிடப் போகிறாயா? இவ்வுலகின் பொருட்டு கடவுளின் நோக்கம் என்ன? யார் இதில் வெற்றி பெறப் போகிறார்கள்? நீ எங்கிருந்து வந்தாயோ அங்கேயே மீண்டும் செல்வதற்காக நான் உன்னை இவ்வுலகிற்கு அனுப்பவில்லை, உன்னை அதில் கரைத்துக் கொள்வதற்கும், உன்னுடைய தனித்துவத்தை நீ மறந்து போவதற்கும், உன்னுள்ளே உள்ள திறமையை, இறை வாழ்விற்கான ஒரு சாத்தியக்கூறை நீ இழக்கலாகாது.*

Escape brings not the victory nor the crown! p.310

*தப்பிப் பிழைப்பது என்பது வெற்றி அல்ல.*
*அது மணிமுடியையும் தருவித்து விடாது. ப.18*

*இது தப்பி ஓடுதல் - கடமையிலிருந்து நழுவுதல், பொறுப்பிலிருந்து விலகுதல், கீழே வந்த கடவுள் தன் கடமையிலிருந்து தப்பி ஓடுகிறார். அதனால் அசுவபதி இவ்வுலகிற்கு திரும்பச் செல்லுமாறு வேண்டப்படுகிறார், அவரும் அன்னையின் ஆணையை ஏற்று*

அவருடைய நோக்கத்தை நிறைவேற்ற ஒப்புக்கொள்கிறார். அடுத்த காதையான The Vision and the Boon இல் மன்னர் அசுவபதி அன்னையிடம் தர்க்கம் செய்கிறார். அக்காதையின் பெயரை சற்று ஆழ்ந்து பார்த்தால் வரம் என முடியும். அந்த வரமாவது:

A high and blank negation is not all,
A huge extinction is not God's last word,
Life's ultimate sense, the close of being's course,
The meaning of this great mysterious world. p.311

உயர்ந்த கறுப்பான ஒரு நராகரணம்தான் எல்லாம் என்றில்லை.
என்பதில்லை.
பேருருக் கொண்ட பேரழிவுதான்
கடவுளினுடைய கடைசிச் சொல் என்பதில்லை.
உயிரினுடைய உணர்வின் அற்றம் என்பதில்லை.
உயிருருவினது பாதையினுடைய போக்கின் முடிவு என்பதில்லை.
இந்தச் சீர்சார்ந்த மாய ஆழங்கொண்ட
உலகத்தின் அர்த்தம் என்பதில்லை.
ப.20

இவ்வுலகம் புதிராகத் தோன்றுகிறது ஆனால் அதற்கு ஒரு பொருள் இருக்கிறது. இவ்வுலகம் இங்கு இருப்பதற்கு எந்தவித முக்யத்துவமோ, பொருளோ இல்லை என எண்ணலாகாது. அதற்கு ஒரு பொருள் இருக்கிறது, சிறப்புத்தன்மை இருக்கிறது, அனைத்து சாத்தியங்களும் நிறைந்தது, ஆற்றல் நிறைந்தது. ஏனெனில் இறைவனுக்கு இங்கு ஒரு நோக்கம் இருக்கிறது. நாம் இதன் பொருளைப் புரிந்து கொண்டு அதை இங்கு வெளிப்படுத்த வேண்டும். இதுதான் அந்த இறை அன்னை அசுவபதிக்கு விடுத்த பணி. இதன் பொருள் என்ன? இறைவனுடைய இலட்சியம் என்ன?

In absolute silence sleeps an absolute Power
Awaking, it can wake the trance-bound soul
And in the ray reveal the parent sun:
It can make the world a vessel of Spirit's force,
It can fashion in the clay God's perfect shape.
To free the self is but one radiant pace; p.311-12

பூரணமான மௌனம் ஒன்றினுள் பூரணமான ஆற்றல் ஒன்று

*உறங்குகின்றது.*
*அது விழித்தெழும்போது —— அதனால்*
*மோனத்தில் ஆழ்ந்து உறைந்துபோன ஆன்மாவை எழுப்ப முடியும்.*
*அதனால் தன்னுடைய ஒளிப்பிரகாசத்தில்*
*மூலக்கதிரவனை —— ஒற்றை மெய்ம்மையின் ஒளியை*
*வெளிக்காட்ட முடியும்.*
*அதனால் - இந்த உலகத்தை ஜீவனுடைய ஆற்றலின்*
*கொள்கலமாக ஆக்க முடியும்.*
*அதனால் - களிமண்ணில் இருந்துகூட கடவுளின்*
*முழுமையான வடிவத்தை வடிக்க முடியும்.*
*ஜீவனுக்கு விடுதலை அளிப்பது பிரகாசமான*
*ஒருபடியென்றாலும், அதுவே இறுதிப்படியாக இருப்பதில்லை.*
*கடவுளுடைய சங்கல்பத்தை நிறைவேற்றுவதுதான்*
*இங்கு ஒருவருடைய இலக்காக இருக்க முடியும்.* *ப.20-21*

*ஆம், நீ அந்த பரமாத்மனை உணர வேண்டும், இதுவே இங்கு வேண்டப்படுவது, அது ஒளிரும் ஒரு பாத அளவு* (radiant pace), *ஆனால் அங்கு வேறு என்ன இருக்கிறது?*

Here to fulfil himself was God's desire.

*இங்கு தன்னை பூரணப்படுத்திக் கொள்வதே இறைவனின் விருப்பம்.*

*அவன் தன்னை பூரணப்படுத்திக் கொள்ளவே இவ்வுலகைப் படைத்திருக்கிறான். இறைவன் இயல்பிலேயே பூரணமானவன் என நாம் அறிவோம். ஆனால் அவன் இவ்வுலகில் தன்னை எப்படி முழுமையாக்கிக் கொள்ள முடியும். இதற்குப் பொருள் என்ன? இறைவனுக்கும் ஒரு நோக்கம் இருக்கிறது. அவனுடைய சிருஷ்டியில் ஒவ்வொரு குழந்தையும் மோட்சத்தையோ அல்லது முக்தியையோ அல்லது இவ்வுலகைத் துறக்கவோ அல்லது அதை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் அழைத்துக் கொள்ளுங்கள், அடைய முடியாது. ஆனால் ஒவ்வொரு குழந்தையும் இறைவனாக ஆக முடியும். இதுவே அவனுடைய இலட்சியம், மேலும் இதுவே இவ்வுலகில் அவனுடைய நோக்கம். எங்கோ மேலுலகத்தில் சொர்க்கத்தில் அல்ல, இப்புவியில் இது நடைபெற வேண்டும் என அவன் விரும்புகிறான்.*

சமீபத்தில் நான் ஸ்ரீஅரவிந்தருடைய ஒரு வாக்கியத்தைப் படித்தேன். நாம் நிச்சயமாக இறைவனை அடையும் ஸித்தியைப் பெறவேண்டும் அவனை அணைத்துக் கொள்ள வேண்டும் என அவர் கூறுகிறார். ஆனால் நாம் அதுவாக ஆவது என்பது அதைவிட முக்கியமானது என்கிறார். இதை அடையமுடியும் என்பது உறுதி, பலர் இந்த ஸித்தியைப் பெற்றிருக்கிறார்கள், பல அன்பர்களும், யோகிகளும் சாதுக்களும் கடவுள் உறையும் தளத்தை எட்டியிருக்கிறார்கள். ஆனால் இறைவன் வேண்டுமென்றே, தானே தெரிவு செய்து, தன்னுடைய நோக்கத்தை இங்கு நிறைவேற்றும் பொருட்டு ஜடமாக மாறி இங்கு அதை சாதித்ததில்லை.

இறைவனின் விருப்பத்தை எங்கோ அல்ல, இங்கு, இப்புவியில் பூர்த்தி செய்பவர்களே கடவுளர்கள். அவர்கள் இப்புவிக்கு வந்ததனால் உயர்வடைகிறார்கள்.

இப்பொழுது இந்த வீழ்ச்சி: ஏன் இதனை, இப்புவிக்கு வந்ததை, வீழ்ச்சி என்கிறோம்? இது ஒரு வீழ்ச்சிதான். கடவுளிடம் நமக்குள்ள ஆன்மிகத் தகுதியை அதாவது நம்முடைய இயல்பான தகுதியை நாம் இழந்துவிட்டோம். அதனால்தான் இதனை நாம் வீழ்ச்சி என்கிறோம். நாம் அவனுடைன் ஒன்றிய நிலையில் இப்பொழுது இல்லை. எப்படியாகினும் ஸ்ரீஅரவிந்தர் மிகவும் துணிந்து சொல்கிறார்: "இந்த இருப்பு (existence) நோக்கமற்ற வீழ்ச்சியாக இனியும் தோன்றவில்லை". அதில் ஒரு நோக்கம் இருக்கிறது, ஓர் இலட்சியம், ஓர் இலக்கு இருக்கிறது.

No more existence seemed an aimless fall
Extinction was no more the sole release.
The hidden Word was found, the long-sought clue,
Revealed was the meaning of our spirit's birth. p.313

இருத்தலானது இனிமேலும் இலக்கற்ற வீழ்ச்சியாகத் தோன்றவில்லை.
உயிர்நீக்கம் மட்டும்தான் இனிமேலும் மீட்சிக்கான
ஒற்றை வழியாக இருக்கவில்லை.
நீண்ட நாட்களின் தேடலுக்கான தடயத்தைச் சுமந்துள்ள ——
ஒளித்து வைக்கப்பட்ட மறைத்திருச் சொல்லானது காணப்பட்டது,
. . . .
ஆழங்கால் கொண்டுள்ள நமது ஜீவனின் பிறப்பினுடைய

அர்த்தமானது வெளிப்படுத்தப்பட்டது. ப.23

மீண்டும் நாம் 'பொருள்', 'நோக்கம்', எனும் சொற்களைப் பார்க்கிறோம். *'Revealed was the meaning of our spirit's birth.'* தற்பொழுது இவ்வுலகில் பிறந்த காரணத்தால் அந்த ஆன்மா:

Condemned to an imperfect body and mind
In the inconscience of material things
And the indignity of mortal life. p.313

*முழுமையற்ற உடலையும், மனதையும் சுமக்கவெனத்
தண்டிக்கப்பட்ட,
ஜடப்பொருள்களின் உணர்வற்ற நிலைக்குள்ளும்,
மானுட உயிரின் புன்மைக்குள்ளும்,
ஆழங்கால் கொண்டுள்ள நமது ஜீவனின் பிறப்பினுடைய
அர்த்தமானது வெளிப்படுத்தப்பட்டது. ப.23*

இவ்வுடல் நோய்க்கு ஆளாகிறது அதனால் இறப்பினைச் சந்திக்கிறது, மனம் அறியாமையினால் ஆனது, அறிவைத் தேடுகிறது ஆனால் ஞானத்தை என்றுமே அடைந்ததில்லை. இதனால்தான் ஆன்மா பிறந்தது. ஆனால் இதுவே இந்நாடகத்தின் இறுதிப் பாகமல்ல, முடிவான செயல் அல்ல. திரை இன்னும் விழவில்லை. சிருஷ்டியே முடிவான பொருளல்ல. அது இன்னும் நடந்து கொண்டேதான் இருக்கிறது. இறைவனின் திருவுள்ளம் பூர்த்தியடைவது, இத்தகைய தொடரும் செயலினாலேயே.

When earth was built in the unconscious Void
And nothing was save a material scene,
Identified with sea and sky and stone
Her young gods yearned for the release of souls
Asleep in objects, vague, inanimate.
….
They cried to Life to invade the senseless mould
And in brute forms awake divinity. p.129

*தன்னுணர்வற்ற பெரும்பாழில், பூமியானது புனையப்பட்டபோது*

---

*அங்கு கடல், வானம், கல் இவற்றின் அடையாளங் கொண்ட
பருப்பொருட் காட்சி ஒன்றைத் தவிர, வேறு எதுவுமே ஆங்கில்லை.*

*பூமியினுடைய இளைய கடவுளர்,*
*தெளிவற்றும், உயிரற்றும், பொருள்களில் உறங்கிக் கிடந்த*
*ஆன்மாக்களின் விடுதலைக்கென ஏங்கினார்கள்.*
*...*
*அவை உயிரை நோக்கி,*
*உணர்வற்ற வார்ப்பினைக் கைப்பற்றவெனக் கண் விழித்து எழவும்,*
*செப்பமற்ற வடிவங்களில் இறைமையை உயிர்ப்பிக்கச் செய்யவும்*
*கூவின; குரல் எழுப்பின; ஏங்கி அழுதன.* *ப.405 / 406*

'In brute forms awake Divinity.?' *நடைமுறையில் இதன் பொருளென்ன? இறைநிலையை மீண்டும் பெற நாம் இவ்வுருவத்தை விட்டுவிட வேண்டியதில்லை. இறைநிலையை இவ்வுருவில் விழித்தெழச் செய், அது அங்கு மறைந்திருக்கிறது, உறங்கிக் கொண்டிருக்கிறது, செயலற்றிருக்கிறது, உள்ளே இருக்கிறது. அங்குதான் இந்த இறைநிலையை விழித்தெழச் செய்ய வேண்டும். ஆன்மாவில் மட்டுமல்ல, புறத்திலும், முற்றிலும் மேம்போக்கான நிலையிலும், விலங்கு போன்ற நிலையிலும் கூட இந்த இறைத்தன்மையை விழித்தெழச் செய்து அடைய வேண்டும். இதுதான் ஸ்ரீஅரவிந்தருக்கு மிகவும் உகந்த நோக்கமாகும். இது சாவித்ரியில் பல இடங்களில் வருகிறது. உதாரணமாக பக்கம் 121 இல், அதே காதையில்:*

Our human ignorance moves towards the Truth
That Nescience may become omniscient, ... p.121

*நமது அறிவற்ற நிலையானது ___ எல்லையற்ற அறிவாக*
*உருமாறுவதற்கெனவும்,*
*பண்புமாற்றம் பெற்ற நமது பிறவி சுபாவங்கள்,*
*இறை எண்ணங்களாக வடிவெடுப்பதற்கெனவும்,* p.390

*ஆன்மிக முயற்சி என்றால் அறியாமையை விடுத்து ஞானம் பெறுவதே. ஆனால் இங்கு ஒரு புதிய நோக்கத்தினை நாம் பார்க்கிறோம். Nescience will become omniscient. ஏதுமறியாதது அனைத்துமறிந்த இறைவனாகிறது. இது சாத்தியமானதே. ஏனென்றால் ஏதுமறியாதது என்பது வேறெதுவுமல்ல அனைத்துமறிந்த இறைவனின் வடிவமே. மிகவும் கீழானது என்பது வேறேதுமல்ல மிக உயர்வானதின் ஒரு வடிவமே. இப்பொழுது*

ஸ்ரீஅரவிந்தர் கீழானதை உயர்வானதாக ஆக்க முயற்சிக்கிறார். ஆனால் இது ஒரு சவாலான விஷயம்.

Our human ignorance moves towards the Truth
That Nescience may become omniscient
Transmuted instincts shape to divine thoughts
Thoughts house infallible immortal sight
And Nature climb towards God's identity. p.121

*நமது அறிவற்ற நிலையானது —— எல்லையற்ற அறிவாக உருமாறுவதற்கெனவும்,*
*பண்புமாற்றம் பெற்ற நமது பிறவி சுபாவங்கள்,*
*இறை எண்ணங்களாக வடிவெடுப்பதற்கெனவும்,*
*நம்முடைய எண்ணங்களில்*
*பிழையில்லாத அமரத்துவத்தின் பார்வையானது குடிகொள்ளவெனவும்,*
*நமது பூமியின் இயற்கையானது —— கடவுளின் அடையாளத்தையும் ஆளுமைதனையும் நோக்கி மேலேறவெனவும்*
*நமது மானுட அறியாமையானது மெய்ம்மையை*
*நோக்கி நகர்கின்றது.* p.390

இயற்கையை இப்போதுள்ள நிலையில் அப்படியே விட்டுவிடாதே அதனை இறைமையாக்கு —— ஏனென்றால் இயற்கை என்பது மறைந்திருக்கும் இறைமை.

ஒரு வீழ்ச்சி என்றால் அது நம்மை இழிவு படுத்திவிடும் என எதிர்பார்க்கிறோம். ஆனால் நம்முடைய கவியோ: 'No fall debased the godhead of her steps.. [p.128]" "எத்தகைய வீழ்ச்சியும் இறைத்தன்மை அவளின் பாதையை இழிவுபடுத்திவிடாது" என்கிறார். நம்முடைய பங்கு இதில் எங்கிருக்கிறது? மற்றொரு அற்புதமான வரியில் ஸ்ரீஅரவிந்தர் இவ்வாறு சொல்கிறார்: அவளுடைய இறைமையின் பொன்மய தங்குதடையற்ற உரிமையில் அனைவருக்கும் ஒரு பங்கு இருக்கிறது .. . நாம் சாவித்ரியை அடைக்கலமாகக் கொள்கிறோம், அவளுடைய பொன்னிறப் பேரொளியில் நாமும் பங்கு கொள்கிறோம். இறைவன் தானே இங்கு வீழ்ந்து விடவில்லை, வீழ்ந்துவிட்ட ஒன்றிற்காக அவன் இறங்கி வந்தான். அது தன்னுடைய ஆன்மிகமும் இறைத்தன்மையுமான இயல்பை எப்பொழுதுமே தன்னுடன் வைத்துக் கொண்டிருக்கிறது.

ஆனாலும் வேண்டுமென்றே இத்தூல வாழ்க்கையின் குறுகிய எல்லைக்குள் தன்னை அடக்கிக் கொண்டிருக்கிறது. இது எவ்வாறு சாத்தியமாயிற்று?

In her nature housing the Immortal's power
In her bosom bearing the eternal Will. p.128

அமரத்துவத்தின் ஆற்றலைத் தனது இயல்பில்
குடிகொண்டவளாக —
நித்திய சங்கல்பத்தைத் தனது நெஞ்சகத்தில் சூடியவளாக —

எவ்வாறு என்பதை இவ்வரிகள் நமக்குச் சொல்கின்றன. ஜீவராசிகள் இறவாத என்றும் நிலைத்திருப்பவனின் ஆற்றலையும் அவனின் மாறாத விருப்பத்தையும் தன்னுள் தாங்கக் கூடிய சாத்தியத்தை இவ்வரிகள் நமக்கு உணர்த்துகின்றன. சாவித்ரி இவ்வுலகில் ஆற்ற வந்த பணியின் மூலமாக நாம் ஒவ்வொருவரும் இதைச் செய்ய முடியும். ஒருவரைக்கூட விட்டுவிடாத அவளின் அருள் மூலமாக நாம் இதைச் செய்ய முடியும். அருள் இங்கிருக்கிறது, அது தன்னுடைய பணியைச் செய்து கொண்டே இருக்கிறது, ஆனால் நாம்தான் அதைக் கவனிப்பதில்லை. முக்தியை அடையும் பொருட்டு இறைவனின் நோக்கத்தை நாம் மறந்துவிட்டோம்.

(தொடரும்)



*13.8.2013 அன்று நடைபெற்ற டாக்டர் எம்.வி. நட்கர்னி நான்காம் நினைவுச் சொற்பொழிவு - ஷ்ரத்தாவன் அவர்கள் ஆற்றும் உரை.*

# சாவித்ரி விளக்கம் 5

நூல் ஒன்று: காதை மூன்று
மன்னரின் யோகம்: ஆன்மவிடுபாட்டு யோகம்
வரிகள் 146 ___ 227
ஆங்கிலத்தில்: ஷ்ரத்தாவன்
தமிழில்: தனலட்சுமி

As so he grew into his larger self,
Humanity framed his movements less and less;
A greater being saw a greater world.

*இதற்கு முந்தைய பகுதியில் மன்னர் அசுவபதி அடைந்த உயர்ந்த ஸித்தியைப் பற்றிப் படித்தோம் - திடீரென நிகழ்ந்துவிட்ட அற்புதமான நிகழ்ச்சி அது. அவர் பெற்ற இந்த ஸித்தி அவருடைய முழு ஜீவனிலும் நிலை கொள்ள, அவருடைய முழு இயல்பிலும் அது படிப்படியாக கலக்கிறது. இவ்வாறு அவருடைய ஜீவன், அவர் உணர்ந்த அவ்வுயர்ந்த ஜீவனில் விரிந்து வளரும் பொழுது குறுகிய வரம்பிற்குட்பட்ட அவருடைய சாதாரண மனித இயல்பு மிகச் சிறியதாக, குறுகியதாக இருப்பது போன்று உணர்கிறார். அவருடைய ஜீவன் பெரிதாக ஆன காரணத்தால் உலகைப் பற்றிய அவருடைய திருஷ்டியும் பெரிதாகிறது.*

*ஒவ்வொரு காதையையும் படிக்கும் பொழுது அக்காதையின் இரண்டாவது பகுதியில் என்ன சொல்லப்பட இருக்கிறது என்பதற்கு ஓர் அறிமுகமாக முதல் பகுதி அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். இதற்கு முந்தைய பகுதியின் இறுதியில் ஸ்ரீஅரவிந்தர் ஆன்மாவின் விடுபாட்டைப் பற்றி விவரித்திருந்தார். அதுவே இக்காதையின் கரு "ஆன்ம விடுபாட்டு யோகம்". இப்பொழுது அந்த ஆன்மா எவ்வாறு விடுபட்டது என்பதை சற்று விரிவாக கூறப்போகிறார்.*

A fearless will for knowledge dared to erase
The lines of safety Reason draws that bar
Mind's soar, soul's dive into the Infinite.

உயர்வான ஞானத்தின் பொருட்டு பயமற்ற மனவுறுதியுடன் இருக்கிறார் மன்னர் அசுவபதி. இதுவே அவருடைய இயல்பு. இத்தகைய பயமற்ற திடமான மனவுறுதி, தைரியம், நமக்காக வரையப்பட்ட புத்திசாலித்தனம் எனும் பாதுகாப்பு கோட்டை முழுவதுமாக துடைத்தழிக்கிறது. இப்பாதுகாப்புக் கோடு நம்முடைய இராமாயணக் கதையை நமக்கு நினைவூட்டுகிறது. ஸ்ரீராமன் சீதாபிராட்டியை பார்த்துக் கொள்ளும்படி இலட்சுமணனிடம் சொல்லிவிட்டு தங்க மானை விரட்டிக் கொண்டு காட்டிற்குள் சென்றுவிடுகிறார். பின் அவர்களுக்கு ஒரு குரல் கேட்கிறது —— அது இராமனின் குரல் போன்று இருக்கிறது. உடன் சீதாபிராட்டி,'ஓ இராமனுக்கு ஏதோ நடந்துவிட்டது —— உடனே போய் என்னவென்று பார்' என இலட்சுமணனை வற்புறுத்துகிறாள். அப்பொழுது இலட்சுமணன் ஒரு கோட்டை வரைந்து, 'இக்கோட்டினைத் தாண்டி வெளியே வராதீர்கள்' என எச்சரித்துவிட்டு செல்கிறான். இதுவே சீதாபிராட்டிக்கான பாதுகாப்புக் கோடு. ஆனால் சீதையோ அக்கோட்டினைத் தாண்டி வெளியேறுகிறாள். அதனால் இராவணன் அவளைக் கவர்ந்து செல்ல இராமாயணக் கதை தொடர்கிறது.

நம்முடைய அறிவு அல்லது புத்திசாலித்தனம் ஒரு பாதுகாப்புக் கோட்டை வரைந்து அதற்கப்பால் செல்ல வேண்டாம் எனத் தடுக்கிறது. நாம் நம்முடைய தற்போதைய நிலையில் உள்ள வரை இப்பாதுகாப்பு கோடு என்பதை கடைபிடித்தாக வேண்டும். 'உன்னுடைய புத்திசாலித்தனத்தை இழந்து விடாதே இல்லையென்றால் நீயும் பைத்தியமாகி விடுவாய், இவ்வுலகில் இது போன்ற பலர் ஏற்கனவே இருக்கிறார்கள்.' என அன்னை நம்மை எச்சரிக்கிறார். அதனால் நாம் உயர்ஞானத்திற்கு நம்மை திறக்க வேண்டும், அதே சமயம் பாதுகாப்புக் கோட்டையும் நாம் வைத்துக் கொள்ள வேண்டும். ஞானம் முழுமையடையும் பொழுது, நம்மை முழுமையாக ஆட்கொள்ளும்பொழுது நாம் இந்த பாதுகாப்புக் கோட்டை அழித்துவிடலாம். மன்னர் அசுவபதிக்கு ஏற்பட்டதைப் போன்ற அனுபவம் நமக்கும் ஏற்பட்டால் அப்பொழுது புத்திசாலித்தனம் எனும் கோடு நமக்குத் தேவையில்லை. *'that bar Mind's soar... '* bar என்றால் வரையறைக்குட்பட்டது. நாம் ஒரு கம்பியின் பின்னால் நின்றால் நம்மால் சுதந்திரமாக செல்லமுடியாது. soar என்றால் கழுகு

*போன்ற மிகமிக உயரத்தில் பறக்கக் கூடிய சக்திமிக்க பறவையின் பறக்கும் திறனைக் குறிக்கிறது. குறிப்பாக எவ்வித முயற்சியும் இன்றி மிக உயரத்தில் பறக்கக்கூடியது கழுகு. தடைகள் மறைந்தபின் அல்லது நீக்கப்பட்ட பின் மனது மிக உயர்ந்து சென்று உணர்வின் உச்சகட்ட நிலையை அடையக் கூடியது. இப்பாதுகாப்புக் கோடு ஆன்மாவின் ஆழ்ந்து செல்லும் தன்மையைக் கூட தடுக்கிறது. அதாவது இவ்விரு இயக்கங்களும் எதிரெதிரானது. மனது உயர்ந்து செல்லக் கூடியது ஆன்மா ஆழ்ந்து சென்று நம்முடைய அக ஆழங்களை அடையவல்லது. இவ்விரண்டு இயக்கங்களுமே நம்மை அப்பரமனை நோக்கி இட்டுச் செல்வது. புத்தியினால் வரையப்பட்ட கோட்டை கடந்து செல்லும் பொழுது, எல்லைகள் நீக்கப்படும் பொழுது இறைவனை நோக்கி நாம் செல்கிறோம்.*

Even his first steps broke our small earth-bounds
And loitered in a vaster freer air.
In hands sustained by a transfiguring Might
He caught up lightly like a giant's bow
Left slumbering in a sealed and secret cave
The powers that sleep unused in man within.

*நம்முடைய சாதாரண உலகின் வரம்புகளை, எல்லைகளைத் தாண்டி அவர் எடுத்து வைத்த முதல் அடி கூட மிகவும் சுதந்திரமான, ஒரு பரந்த இயக்கமாக இருந்தது. இங்கு* loiter *எனும் அழகான சொல்லை உபயோகிக்கிறார் ஸ்ரீஅரவிந்தர். நீங்கள் ஓரிடத்திற்கு செல்லும் பொழுது, உங்களுக்கு அதிக நேரமிருந்தால் நீங்கள் அவசரமின்றி அவ்விடத்தைச் சுற்றிப் பார்ப்பீர்கள். அங்கு என்னவெல்லாம் இருக்கிறது என்பதை நிதானமாக ஒவ்வொன்றாகப் பார்ப்பீர்கள். மிகவும் ஓய்வான தளர்வான அமைதியான ஓர் உணர்வை இங்கு குறிக்கிறது. நாம் இவ்வுலகின் எல்லையைக் கடக்கும் பொழுது இது போன்ற ஒரு சுதந்திரமான உணர்வு இருக்கக்கூடும்.*

*அடுத்த வரியில் 'giant's bow' எனக் குறிப்பிடுகிறார். இச்சொற்கள் மீண்டும் இராமாயணக் கதையை நமக்கு நினைவுபடுத்துகின்றன. சீதையின் தந்தை ஜனக மகாராஜா ஒரு பெரிய சிவதனுஷை வைத்திருந்தார். எவராலும் அதை எடுத்து நாணேற்ற முடியவில்லை. ஆனால் இராமன் சென்று அந்த வில்லை எடுத்து அம்பை ஏற்றினான்.*

அது இரண்டாக உடைந்தது. இங்கு இப்பிரமாண்டமான வில்லிற்கு ஒப்பாக நம்முள் மறைந்திருக்கும் ஆற்றலை, உபயோகிக்கப்படாமல் உறங்கிக்கொண்டிருக்கும் ஆற்றலைக் குறிப்பிடுகிறார் ஸ்ரீஅரவிந்தர். அசுவபதியினால் அத்தகைய ஆற்றலை எளிதாகப் பற்றிக் கொண்டு கையாள முடிகிறது. ஏனெனில் அவருடைய கைகள் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய பேராற்றிலின் துணையினைப் பெற்றிருக்கின்றன. அவரை மனித நிலைக்கு அப்பால் உயர்த்தும் மாற்றத்தை தரக்கூடிய வலிமையை அப்பேராற்றல் அவருக்கு அளிக்கிறது. 'transfigure' என்றால் ஏதேனும் ஒன்று உயர்நிலைக்கு மாறுவது அல்லது அதனுடைய உச்சகட்ட மாற்றத்திற்கு மாறுவது என்பது பொருள். அடுத்து 'slumbering' எனும் கவிநயம் மிக்க ஒரு வார்த்தையைப் பார்க்கிறோம். இச்சொல்லுக்கு தூங்குதல் என்பது பொருள். அங்கு ஓர் இரகசியமான குகை இருக்கிறது, எல்லா பக்கங்களிலும் அடைக்கப்பட்டு மறைவாக இருக்கிறது. அக்குகை நம்முள் நம்முடைய ஜீவனின் ஆழத்தில் மறைந்திருக்கிறது. அங்கு எண்ணற்ற ஆற்றல்கள் உபயோகிக்கப்படாமல் உறங்கிக்கிடக்கின்றன. மேலிருந்து அந்த பலம் வரும்பொழுது நம்மால் அந்த பிரமாண்டமான அம்பை தூக்கி நிறுத்த அந்த ஆற்றல்களை உபயோகப்படுத்த முடியும்.

He made of miracle a normal act
And turned to a common part of divine works,
Magnificently natural at this height,
Efforts that would shatter the strength of mortal hearts,
Pursued in a royalty of mighty ease
Aims too sublime for Nature's daily will:
The gifts of the spirit crowding came to him;
They were his life's pattern and his privilege.

இத்தகைய ஆற்றலினால் நமக்கு அதிசயமாகவும் அற்புதமாகவும் தோன்றும் விஷயங்கள் அவருக்குச் சாதாரண செயலாக இருக்கின்றன. இத்தகைய அற்புதமான செயல்களை இறைப்பணியின் பொதுவான பகுதியாக அவர் மாற்றிவிடுகிறார். அவர் அடைந்த ஸித்தி, உச்சக்கட்ட ஆன்மிக நிலை, ஆனால் அவர் இருக்கும் இப்போதைய நிலையில் அனைத்துமே இயல்பானதாக இருக்கிறது. அவர் அடைந்த விஷயங்கள் மிகமிக உயர்ந்தவை, அற்புதமானவை ஆனால் அவருக்கோ அது இயல்பான ஒன்று.

சாதாரண மனிதன் இது போன்ற மகத்தான செயல்களில் ஈடுபட்டால் அம்முயற்சி நம்மை நிலைகுலையச் செய்துவிடும். அம்முயற்சி மானுட இதயத்தின் வலிமையை சுக்கு நூறாக்கிவிடும் என்கிறார். ஆனால் மன்னர் அசுவபதிக்கோ அதைத் தொடர்ந்து முயற்சிக்க முடியும், ஏனெனில் அவருடைய இலக்கு, அவருடைய நோக்கம் மிகவும் உயர்வானது, சாதாரணமான இயற்கையின் உறுதிக்கு இது மாறானது. நம்முடைய வாழ்வின் இலட்சியம் இன்னும் சாதாரணமான நிலையிலேயே இருக்கிறது. ஆனால் அவருக்கோ இத்தகைய உயர்வான இலட்சியங்களை நோக்கி தொடர்ந்து முயற்சி செய்வதோடு மட்டுமல்லாமல் அதை மிகச் சுலபமாக அசகாய பலத்துடன் இதைச் செய்ய முடிகிறது. இதன் பின் மிக முக்கியமான ஒன்று: ஆன்மா அளிக்கும் கொடை பல விதமானது —— அவையனைத்தும் ஒன்று சேர்ந்து ஒரே சமயத்தில் அவரிடம் வருகின்றன. ஆன்மாவின் இத்தகைய கொடைகள் அவருடைய வாழ்வின் இயல்பான தன்மையாக, சிறப்புரிமையாக ஆனது. இத்தகைய பரிசுகள் அனைவருக்கும் அவ்வளவு எளிதாக கிடைக்கக் கூடியதல்ல, ஒரு சிலருக்கே இது வாய்க்கப் பெறும். இப்பொழுது ஸ்ரீஅரவிந்தர் ஆன்மாவின் இத்தகைய கொடைகள் என்னென்ன என்பதை நமக்கு சொல்கிறார்.

A pure perception lent its lucent joy:
Its intimate vision waited not to think;
It enveloped all Nature in a single glance,
It looked into the very self of things;
Deceived no more by form he saw the soul.

ஆன்மாவின் முதல் கொடை, மிக முக்கியமான ஒன்று "தூய்மையான புலனுணர்வு". நம்முடைய புலனுணர்வு, நாம் ஒன்றை உணரும் விதம், ஒரு விஷயத்தைப் பற்றிய அனுபவம், மிகவும் தெளிவற்றதாக அனைத்தும் கலந்த கலவையாக இருக்கிறது. இத்தகைய புலனுணர்வு பெரும்பாலும் நம்முடைய புலன்களின் மூலமாக, புலன்களின் மனது எதைப் பற்றிக் கொள்கிறதோ அதுவே நம்மை வந்தடைகிறது. நம்முடைய புலன்களோ பல விஷயங்களினால் சூழப்பட்டுள்ளது. ஆழ்மனதிலுள்ள விஷயங்கள், குழந்தைப் பருவத்தில் நாம் கற்றுக் கொண்டவை, நம்முடைய சூழ்நிலையிலுள்ள விஷயங்கள், நம்முடைய பிராணனின் விருப்பு வெறுப்புகள், நம்முடைய பயம் இது போன்ற பல வகையான

பதிவுகளினால் நம்முடைய கூறுணர்வு தெளிவற்றதாக இருக்கிறது. ஆன்மாவின் பரிசு இது போன்ற தெளிவற்ற அனைத்தையும் நீக்கி தூய்மையான புலனுணர்வை நமக்கு அளிப்பதே ஆகும். இத்தகைய தூய்மையான உணர்வு ஆனந்தத்தை அளிக்கிறது. அந்த ஆனந்தம் ஒளிமயமானதாக இருக்கிறது. இத்தகைய தூய்மையான புலனுணர்வின் அகக்காட்சி எதைப் பற்றியும் சிந்தித்து வருவதில்லை, இயல்பாக எத்தகைய முயற்சியுமின்றி வருவது. அதே சமயம் நம்முள்ளிருந்து, மிக ஆழத்திலிருந்து நமக்கு மிக நெருக்கமான ஒன்றாக இருப்பதையும் காணலாம். இத்தகைய காட்சி நமக்கு நெருக்கமானதாக இருந்தாலும் இயற்கை அனைத்தையும் கவிந்து அதே சமயம் அவ்விஷயங்களை ஆழ்ந்து நோக்குகிறது. இத்தகைய ஆழந்து நோக்குதல் விஷயங்களின் மூலத்திற்கே இட்டுச் செல்கிறது. அதனால் இனிமேலும் நாம் வழி தவறிச் செல்லாமல், புறத் தோற்றத்தினால் ஏமாற்றப்படாமல், மேலோட்டமாகப் பார்க்காமல், ஒவ்வொரு விஷயத்திலும் அதற்கு பின்னாலுள்ள உண்மையையும் அது எதை வெளிப்படுத்த விழைகிறது என்பதையும் நாம் அறிய முடியும். இத்தகைய ஸித்தியினால் அசுவபதி உருவங்களின் வழியாக ஆன்மாவைப் பார்க்கிறார்.

In beings it knew what lurked to them unknown;
It seized the idea in mind, the wish in the heart;
It plucked out from grey folds of secrecy
The motives which from their own sight men hide.

மன்னர் அசுவபதி மற்றவர்களை அதாவது மற்ற மனிதர்களைப் பார்க்கும் பொழுது அவர் தன்னுடைய புலனுணர்வுத் தன்மையினால் அவர்களுக்கே தங்களைப் பற்றித் தெரியாத, மறைந்திருக்கும் விஷயங்களை அவரால் அறிய முடிகிறது. Lurk என்ற வார்த்தையை நாம் இங்கு காணலாம். இச்சொல்லுக்கு 'மறைந்து கொண்டு' என்பது பொருள். புலி சிங்கம் போன்ற பயங்கரமான விலங்குகள் தங்களுடைய இரையைப் பிடிப்பதற்காகப் புதர்களின் பின்னால் தம்மை மறைத்துக் கொண்டு தாக்கும். அது போன்றே திருடன் மறைந்திருந்து, பின் சமயம் வரும் பொழுது வீட்டினுள் நுழைவான். நம் ஒவ்வொருவரிடமும் பல விஷயங்கள் மறைந்திருக்கின்றன. அவை அங்கிருப்பதே நமக்குத் தெரிவதில்லை. ஆனால் தூய்மையான புலனுணர்வினால் இவைகளைப் பார்க்க முடியும்.

இத்தகைய உணர்வு மனிதர்கள் தங்கள் மனதில் என்ன நினைக்கிறார்கள், அவர்களுடைய இதயம் எதை விரும்புகிறது என்பதை அறிந்து கொள்ள முடியும். மனிதர்கள் ஏன் இவ்வாறு நினைக்கிறார்கள்? ஏன் இவ்வாறு செயல்படுகிறார்கள்? ஏன் இதை விரும்புகிறார்கள்? இதன் காரணம் என்ன என ஆராய்ந்தால் நமக்கு என்னவென்று புரிவதில்லை, இவ்வாறு அவர்கள் மறைக்கும் காரணங்கள் ஒரு சாம்பல் நிறத் துணியினால் மூடி இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது போலத் தோன்றுகிறது. ஆனால் அசுவபதியினுடைய தூய்மையான புலனுணர்வுத் திறன் அதனைப் பிடித்து அந்த சாம்பல் நிற இரகசியப் பொட்டலத்தில் மறைத்து வைக்கப்பட்டிருப்பதை வெளியில் கொண்டு வருகிறது. மனிதர்கள் மறைத்து வைத்திருக்கும் காரணத்தை கண்டறிகிறது. சில சமயம் நாம் சில காரியங்களைச் செய்துவிட்டு அவ்வாறு செய்ததற்கான சிறந்த காரணத்தையும் நாம் சொல்வோம். ஆராய்ந்து பார்த்தால் அதன் உண்மையான நோக்கத்தை இரகசியமாக மறைத்திருப்போம். ஆனால் அந்த தூய்மையான உணர்வு இவையனைத்தையும் ஊடுருவிச் சென்று உண்மையான நிலையைப் பார்க்கிறது, உண்மையான உணர்வை உணர்கிறது.

> He felt the beating life in other men
> Invade him with their happiness and their grief;
> Their love, their anger, their unspoken hopes
> Entered in currents or in pouring waves
> Into the immobile ocean of his calm.

மன்னர் அசுவபதி மிகவும் அமைதியாக தன்னுள் வரும் அனைத்து உணர்வலைகளையும் உணரும் நிலையில் இருக்கிறார். மற்ற மனிதர்களுடைய வாழ்வின் துடிப்புக்களை உணர்பவராக, அத்தகைய துடிப்புக்கள் அவரை ஆட்கொள்வதாக உணர்கிறார். அவர்களுடைய மகிழ்ச்சியையும், துக்கத்தையும், அவர்களுடைய அன்பையும் கோபத்தையும், அவர்களால் வெளிப்படுத்தப்பட முடியாத வார்த்தைகளால் விவரிக்க இயலாத நம்பிக்கைகளையும் மன்னர் அசுவபதியால் உணர முடிகிறது. பரந்த மகாசமுத்திரத்தையொத்த அவருடைய அசைவற்ற மோனத்தில் மற்ற மனிதர்களுடைய உணர்வலைகள் ஓர் ஓடையாகப் பாய்கிறது அல்லது அலைகளாக மிகவும் ஆற்றலுடன் அவரைத் தாக்குகிறது. ஆனால் இத்தகைய அலைகள் அவருடைய உணர்வைப் பாதிக்கவில்லை. அவரால்

இவற்றை கண்டுகொள்ள முடிந்தாலும் அதன் தாக்குதலுக்கு ஆளாகாமல் அசைவற்று இருக்கிறார் மன்னர் அசுபதி.

He heard the inspired sound of his own thoughts
Re-echoed in the vault of other minds;
The world's thought-streams travelled into his ken;
His inner self grew near to others' selves
And bore a kinship's weight, a common tie,
Yet stood untouched, king of itself, alone.

அவர் தன்னுடைய எண்ணங்களைப் பற்றி அறிந்தவராக, அத்தகைய எண்ணங்கள் மேலிருந்து வருகின்றன என்றும் அவை இவ்வுலகில் எங்கும் வியாபித்து எதிரொலியாக மீண்டும் அவரிடமே வருகின்றன என்பதையும் அறிந்தவராக இருக்கிறார். அந்த எண்ணங்களின் சில பகுதிகள் சிலருடைய மனங்களினால் கிரகித்துக் கொள்ள முடிகிறது. அத்தகைய மனிதர்களுடைய மனதின் எதிரொலிகள் மீண்டும் அவரிடமே வந்து சேருகின்றன. மற்றுமொரு அனுபவமும் அவருக்கு ஏற்படுகிறது. உலகின் எண்ண அலைகள் அவர் அறியும் அளவிற்கு பயணித்து அவரிடம் வருகிறது. Ken எனும் சொல்லைப் பற்றி இங்கு நாம் பார்க்கலாம். அறிவெல்லை என்பது இதற்குப் பொருள். நம்மால் அறிந்து கொள்ளக் கூடியது. "Beyond our ken" எனச் சொன்னால் நம்மால் அறிந்து கொள்ள முடியாதது, நம்முடைய அறிவெல்லைக்கு அப்பாற்பட்டது என்பது பொருள். எண்ண அலைகள் எப்பொழுதும் நம்மைச் சுற்றிச் சுற்றி வருகின்றன, ஒரு மனதிலிருந்து மற்றொன்றுக்கு பயணித்துக் கொண்டே இருக்கின்றன. அங்கு இவ்வுலகம் முழுவதையும் இத்தகைய எண்ண அலைகளால் கவிந்து கொள்ளும் சூட்சுமமான வளிமண்டலம் ஒன்று இருக்கிறது. மன்னர் அசுவபதியினால் இத்தகைய எண்ண ஓட்டங்களை அதன் சூழலை அறிய முடிகிறது. அடுத்ததாக அவருடைய அகத்தில் உறையும் ஆத்மன் மற்ற ஆன்மாக்களை தனதாக அறிகிறது, தன்னுடைய உறவாக உணர்கிறது. Kin எனும் சொல்லுக்கு நெருங்கிய உறவினர் அல்லது இரத்த சம்பந்தமுள்ள உறவினர் என்பது பொருள். இங்கு மன்னர் அசுவபதியினுள் உறையும் ஆத்மன் அனைத்து ஆன்மாக்களையும் தன்னுடைய நெருங்கிய உறவினராக உணர்கிறது. அவர் தனக்கும் மற்றவர்களுக்குமான அந்த நெருக்கத்தை, உறவினை உணரமுடிகிறது என்றாலும் ஏதோ ஒன்று அவரை

மற்றவர்களிடமிருந்து அவருடைய ஆத்மனை பிரித்து வைக்கிறது. அதன் காரணமாக எதனாலும் பாதிக்கப்படாமல், ஓர் அரசனைப் போன்று தனியாக இருக்கிறது. அந்த சாந்தியில், அந்த மையத்தில், ஆழத்தில் நிலைகொண்டிருக்கும் அவருடைய ஆத்மனின் மையத்தில் அவர் இருப்பதனால் அவரால் அனைத்தையும் அறிய முடிகிறது அதே சமயத்தில் அதனால் பாதிக்கப்படாமல் தானே அரசனாக தனியாக இருக்கிறது.

A magical accord quickened and attuned
To ethereal symphonies the old earthy strings;
It raised the servitors of mind and life
To be happy partners in the soul's response,
Tissue and nerve were turned to sensitive chords,
Records of lustre and ecstasy; it made
The body's means the spirit's acolytes.

இவ்வரிகள் சற்று வித்தியாசமானவை. இவ்வரிகளில் சொல்லப்பட்டிருப்பவை கூட தூய்மையான புலனுணர்வைச் சார்ந்தே இருக்கின்றன. ஆனால் இதில் கருணையும் சுமுகமும் காணப்படுகிறது. இங்கு ஸ்ரீஅரவிந்தர் உபயோகிக்கும் உருவகங்கள் முதலில் இசையைச் சார்ந்தவை. மனதை மயக்கும் இசை எப்பொழுது ஏற்படுகிறது? அனைத்து இசைக்கருவிகளும் இசைந்து சுமுகமாக இசைக்கும் பொழுது ஏற்படுகிறது. Accord என்றால் இசைவு என்பது பொருள்; 'quickened' உயிர்ப்பூட்டுதல், விழித்தெழச் செய்தல்; 'attuned' என்றால் சுருதி சேர்த்தல். சில இசைக்கருவிகளில் இசைக்கம்பிகள் இரு தொகுதிகளாக இருக்கும். ஒரு தொகுதியிலிருக்கும் இசைநாண்களை நாம் மீட்டும்பொழுது மற்ற தொகுதி மீட்டுவதற்கேற்ப தானே அதற்கேற்ற இசைவுடன் அதிரும். அதனால் ஓர் இசைக் கலைஞன் தான் அந்த இசைக்கருவியை மீட்ட ஆரம்பிக்குமுன் சுருதி சேர்ப்பது வழக்கம். அதனால் அவர் மீட்டும் அந்த இசை ஒன்றோடொன்று இசைந்து அற்புதமானதாக இருக்கும். Symphony எனும் சொல்லுக்கு இசைக்குழு என்பது பொருள் (orchestra எனவும் சொல்வதுண்டு) இது போன்ற இசைக்குழுவில் ஒரே ஒரு இசைக்கருவி மட்டும் இசைக்கப்படுவதில்லை. ஒரே வகையான இசைக்கருவியை பலரும், அதே போன்று பல்வேறு வகையான இசைக்கருவிகளும் இணைந்து இசைவாக இசைக்கப்படுவதே symphony எனப்படுவது.

அற்புதமான அந்த தேவகானம் புவியின் பழமையான நாண்களுக்கு உயிரூட்டியது. "Quick" என்ற சொல்லுக்கு விரைவாக அல்லது வேகமாக எனப் பொருள் கொள்வோம். ஆனால் இச்சொல்லுக்கு உயிரோட்டமுள்ள, உணர்வுள்ள என்றும் பொருள் உண்டு. மன்னர் அசுவபதிக்கு இவ்வுலகின் பழைய நாண்கள், அதாவது சாதாரண மனிதனுடைய நரம்பு மண்டலம் சூட்சுமமான இசையோடு தன்னை சுருதி சேர்த்துக் கொண்டது. இத்தகைய மதுரகானம், நம்முடைய மனதையும் வாழ்வையும் இயக்கும் பகுதிகளான உடலையும் மூளையையும், புலன்களையும் நரம்புகளையும் ஆன்மாவின் மறுமொழிக்கேற்ப அதனுடைய மகிழ்ச்சி மிக்க தோழனானது. இத்தகைய தேவகானத்திற்கு ஆன்மா மிகமிக மென்மையான உணர்வுடன் பதிலுரைக்கிறது. ஆனால் அது நம் உடலுக்குத் தெரிவதில்லை. ஆனால் மன்னர் அசுவபதிக்கோ தசையும் நரம்புகளும் உணர்வுமிக்க இசைநாண்களாக மாறின. மேலுலகின் ஆனந்தத்தினை ஏற்றுக்கொள்ளவும், அதன் ஒளியையும் பரமானந்தத்தையும் பதிவு செய்தன. அவருடைய புலன்கள் ஒரு கருவியாக செயல்படாமல் ஆன்மாவின் பணியாளனாக மாறின. "Acolytes" என்றால் புனிதமான இடத்தில் சேவை செய்பவர்கள் என்பது பொருள். கோவிலின் கருவறையில் பணியாற்றும் பூசாரிக்குத் தேவையானவற்றை கொண்டு வந்து கொடுத்து வழிபாட்டிற்கான ஏற்பாடுகள் செய்பவர்களை acolytes என்கிறோம்.

> A heavenlier function with a finer mode
> Lit with its grace man's outward earthliness;
> The soul's experience of its deeper sheaths
> No more slept drugged by Matter's dominance.

எனவே இதுதான் கடினமானது: "ஆன்மா அதனுடைய ஆழமான நிலைகளின் அனுபவங்கள். . ." ஆன்மா ஜடத்தினால் மட்டுமல்லாமல் பல சூட்சும உடல்களினால் அல்லது உறைகளால் மூடப்பட்டுள்ளது. அவையனைத்தும் வெளிப்பட வேண்டும். ஆனால் மனிதர்களிடையே இத்தகைய ஆழ்ந்த, சூட்சுமமான ஆன்மாவின் அனுபவங்கள் அனைத்தையும் ஜடம் தன் ஆக்கிரமிப்பால் விழுங்கிவிடுகிறது. நம்முடைய மனம் சுதந்திரமாகச் செயல்படக் கூடியது. ஆனால் அதன் செயல்பாடுகள் நம்முடைய மூளையின் நிலையைப் பொருத்து இந்த லௌகீக உலகினால் பாதிக்கப்படுகிறது. இதுவே ஜடத்தின் அடக்கி ஆளும்

தன்மை. ஜடத்தின் இத்தகைய தன்மை இப்பிரபஞ்சத்தையும் மேலும் ஆன்மாவின் ஆழ்ந்த நிலைகளையும் பாதிக்கிறது. ஆனால் மன்னர் அசுவபதிக்கு, "ஓர் உயர் உலகப் பணியாக", முற்றிலும் வேறுவிதமானப் பணியாக, சூட்சுமமானதாக, மனிதனின் சாதாரணப் புறத்தன்மைகள் கூட எளிமையானதாக, அழகும் நளினமும் மிக்கதாக ஒளி பெற்றுத் திகழ்கிறது. இங்கு "grace" எனும் வார்த்தையை உபயோகித்திருக்கிறார் ஸ்ரீஅரவிந்தர். இங்கு இச்சொல்லுக்கு நளினம் என்பது பொருள். ஒரு பெண் நடனமாடும் பொழுது இலகுவாக நளினமாக ஓர் அபிநயத்துடன் ஒன்றை வெளிப்படுத்துகிறாள் அல்லவா? இத்தகைய தன்மை ஜடத்தின் பளுவை நீக்கிவிடுகிறது.

In the dead wall closing us from wider self,
Into a secrecy of apparent sleep,
The mystic tract beyond our waking thoughts,
A door parted, built in by Matter's force,
Releasing things unseized by earthly sense:
A world unseen, unknown by outward mind
Appeared in the silent spaces of the soul.

மன்னர் அசுவபதியின் தசையும் நரம்புகளும் புலன்களும் சூட்சுமமான முறையில் செயல்படுவதால் சூட்சும உலகங்களை அவரால் பார்க்க முடிகிறது. ஜடத்தின் **"இறந்த சுவர்கள்"** நம்மை நம்முடைய பரந்த ஆத்மனிலிருந்து பிரிக்கிறது. ஆனால் மன்னர் அசுவபதிக்கு இச்சுவரின் கதவுகள் திறக்கப்படுகின்றன. ஜடத்தின் ஆற்றலினால் இச்சுவரில் ஒரு கதவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கதவினைத் திறந்தால் உறக்க நிலைபோன்ற இடத்திற்கு நம்மை இட்டுச் செல்கிறது. 'Tract" என்றால் ஓர் இடம். நம்முடைய விழிப்பான எண்ணங்களுக்கு அப்பாற்பட்ட புதிரான ஓரிடத்திற்கு நம்மை இட்டுச் செல்கிறது. இக்கதவினைத் திறந்ததால் நம்முடைய புவியின் புலன்களால் அறிய முடியாத, கிரகித்துக் கொள்ள முடியாத ஒன்றை விடுவிக்கிறது. அதனால் மன்னர் அசுவபதி முற்றிலும் புதிய உலகினை, நம்முடைய புறத்தன்மை கொண்ட மனத்தால் அறிய முடியாத, பார்க்க இயலாத ஓர் உலகினை, ஆன்மாவின் மௌனமான தளத்தில் தெரியும் புதிய உலகினைப் பார்க்கிறார். இப்புதிய விழிப்புணர்வு, தூய்மையான புலனுணர்வு ஆன்மாவின் கொடையாக அவரிடம் வந்து சேர்கிறது.

He sat in secret chambers looking out
Into the luminous countries of the unborn
Where all things dreamed by the mind are seen and true
And all that the life longs for is drawn close.

இங்கு ஆரோவிலில் "chamber" எனும் சொல் நமக்கு மிகவும் அறிமுகமான ஒன்று. மாத்ரிமந்திரில் தியானம் செய்யும் அந்த அறையை "Inner chamber" எனச் சொல்கிறோம். "Chamber" என்றால் ஒரு தனிமையான அறை என்பது பொருள். இங்கு மன்னர் அசுவபதி அக உலகங்களிலும், தளங்களிலும் உள்ள இரகசியமான அறையில் அமர்ந்திருப்பதை நமக்குக் காட்டுகிறார். அவர் வெளியே பார்க்கிறார், அவர் பார்ப்பது தூலக் கண்களினால் அல்ல சூட்சும சரீரத்தின் கண்கள் வாயிலாகப் பார்க்கிறார். எதைப் பார்க்கிறார்? இன்னும் இவ்வுலகில் பிறக்காத ஒளிமிக்க பிரதேசங்களின் ஜீவன்களை, சூட்சும உலகங்களின் ஜீவன்களைப் பார்க்கிறார். இத்தகைய ஒளிமிக்க பிரதேசங்களில் அனைத்தையும் பார்க்க முடியும்: மனது காணும் கனவுகள் பற்றிய விஷயங்கள், இவ்வுலகம் உயரிய நோக்கங்களோடு எவ்வாறு இருக்க வேண்டும் என நாம் ஆசைப்படுகிறோமோ அத்தகைய விஷயங்கள் அனைத்தும் இந்த சூட்சும உலகில் இருக்கின்றன. அங்கு நிஜமாகவே இவையனைத்தும் இருக்கின்றன, அவைகளைப் பார்க்க முடியும் அவை நிஜமானவையே பிரமையல்ல. நம் வாழ்வில் நாம் மிகவும் விரும்பும் அனைத்து ஆனந்தமும் அனைத்துப் பொருட்களும் என இவையனைத்தும் அங்கு எளிதில் நம்மால் அடையக்கூடியதாக இருக்கும். "To long for" என்றால் மிகத் தீவிரமான விருப்பம்.

He saw the Perfect in their starry homes
Wearing the glory of a deathless form,
Lain in the arms of the Eternal's peace,
Rapt in the heart-beats of God-ecstasy.

"the Perfect" எனும் இச்சொல்லுக்கு இங்கே "பூரண ஜீவன்கள்" என்பது பொருள். இவர்கள் இத்தூல உலகின் அனைத்து விதமான அபூரணங்களிலிருந்து விடுபட்டவர்கள், உயர் தளத்திலிருப்பவர்கள். அவர்களுடைய வீடு ஜொலிக்கக் கூடியது, விண்மீண்கள் நிரம்பிய வீட்டினைப் போன்றது. நட்சத்திரங்கள் பல உண்மைகளைக் குறிக்கும் சின்னங்கள். இந்த ஒவ்வொரு பூரணமான ஜீவனும் இறவாத வடிவத்தை அணிந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்கு

பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை. மேலும் அவர்கள் அணிந்துள்ள வடிவம் அழகானதாக ஒளி நிறைந்ததாக இருக்கிறது. அவர்கள் என்றென்றும் நிலைத்திருக்கும் அமைதியின், நித்தியத்தின் கரங்களால் தாலாட்டப்படுபவர்களாக இருக்கிறார்கள். அதே சமயம் ஆனந்தப் பரவசத்தில் ஆட்கொள்ளப்பட்டு மெய்ம்மறந்திருக்கிறார்கள். "கடவுட் பரவசத்தின் இதயத்துடிப்பில்" இருந்தனர். அவர்களுடைய இதயம் அமைதியாக மட்டுமல்ல ஆனந்தமாகவும் துடித்தது. இங்கு "rapt" எனும் சொல்லைப் பற்றிப் பார்க்கலாம். பறவைகளை "raptors" எனச் சொல்வதுண்டு. இப்பறவைகள் மிகமிக உயரத்திலிருந்து பறந்து வந்து தன்னுடைய இரையை எடுத்துக்கொண்டு செல்லும். கழுகு வகைப் பறவைகளை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். நீங்கள் 'rapture' எனும் ஆனந்தப்பரவசத்தை அனுபவிக்கும் பொழுது அதனால் ஆட்கொள்ளப்பட்டு இவ்வுலகைப் பற்றிய நினைவில் இருக்கமாட்டீர்கள், பரமானந்தத்தின் உச்சநிலையில் அனைத்தையும் மறந்து எங்கோ இருப்பீர்கள், சாதாரண உணர்வில் இருக்க மாட்டீர்கள்.

He lived in the mystic space where thought is born
And will is nursed by an ethereal Power
And fed on the white milk of the Eternal's strengths
Till it grows into the likeness of a god.

மன்னர் அசுவபதியின் உணர்வு நிலை மாறி அவர் உயர் தளத்தில் வாழ்கிறார். அவருக்கு தான் இவ்வுடலில் வாழ்கிறோம் எனும் நிலை இனி இல்லை. அவர் எண்ணம் எங்கு உருவாகிறதோ அந்தப் புதிரான தளத்தில் அவர் வாழ்கிறார். நம்முடைய சாதாரண மனதிற்கு அப்பால், எந்த இடத்தில் மனம் அமைதியாக இருக்கிறதோ, அந்த இடம் புதிரான, அற்புதமான ஓரிடம், அங்குதான் எண்ணங்கள் உருவாகின்றன. அப்புதிரான தளத்தில்தான், ஒரு சூட்சுமமான ஆற்றல் இருப்பதாகச் சொல்கிறார் ஸ்ரீஅரவிந்தர். அந்த ஆற்றலே நம்மை போஷிக்கிறது, நாம் எண்ணுவதை திண்ணியதாக்கும் நம்முடைய மனவுறுதியை மேலும் உறுதிப்படுத்துகிறது. 'Ethereal" என்றால் சூட்சுமமான வகையைச் சார்ந்தது என்பது பொருள். பஞ்ச பூதங்கள் என்றால் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பதை நாம் அறிவோம். இவ்வாறு வரிசைப்படுத்தும் பொழுது நாம் ஒன்றை அறியலாம், நிலம் திடத்தன்மை கொண்டது, நீர் அடுத்த

நிலையில் திரவத்தன்மையிலிருக்கிறது, நெருப்பு அதற்கடுத்த நிலையிலும், காற்றினைக் கண்களால் காணமுடியாத நிலையில் இருப்பதனால் மற்ற மூன்றையும்விட மிக சூட்சுமமானது. இறுதியாக ஆகாயம் நம்மால் உணரமுடியாத ஒன்று. ஆனால் ஸ்ரீஅரவிந்தர் நாம் இவ்வாறு குறிப்பிடும் இவையனைத்தும் நாம் பார்க்கும் நிலத்தையோ நீரையோ குறிக்காது என்கிறார்.

நிலம் என்றால் இங்கிருக்கும் மண்ணையோ கல்லையோ குறிக்காது, நீர் என்றால் உடனே நாம் நதியைப் பற்றி எண்ணுவோம், நெருப்பு என்றால் எது நம்மை சுடுகிறதோ அதையும் காற்று என்றால் நாம் சுவாசிக்கும் காற்றைப் பற்றியும் நினைப்போம். நம்முடைய மூதாதையர்கள் பஞ்சபூதங்களைப் பற்றிப் பேசும் பொழுது அவைகளின் சூட்சுமமான நிலைகளைப் பற்றியே கூறியிருக்கின்றனர். இந்த ஜட உலகில் நாம் அறியும் அனைத்தும் இப்பஞ்சபூதங்களின் கலவையே. இக்கலவையில் "புவி"யின் ஜடக்கோட்பாடு பெரும் பங்கு வகிக்கிறது. இப்பஞ்சபூதங்களில் மிகவும் சூட்சுமமான நிலையிலுள்ள பொருள் ஆகாயம். நம்முடைய அறிவியலாளர்கள் ஆகாயம் என்ற ஒன்று இல்லை என்பதை நிரூபித்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் ஆகாயம் என்ற ஒரு பொருளை அறிவியல் விஞ்ஞானிகள் அறிவதற்கு முன்பே ஸ்ரீஅரவிந்தர் இதைப் பற்றிக் கூறியிருக்கிறார். மேலும் அதனுடனான தொடர்பு அவர்களுக்குத் தெரியவரும் எனவும் கூறுகிறார். இந்த வாயு மண்டலத்திற்கு அப்பாற்பட்ட பரந்த ஆகாய வெளி மிகவும் தூய்மையானது, சூட்சுமமானது, அது ஒரு நுட்பமான பொருள். இதனுடைய ஆற்றல் நம்முடைய மனவுறுதியை போஷிக்கிறது, தாய் தன் குழந்தையைப் பாலூட்டி சீராட்டிக் காப்பது போன்று பாதுகாக்கிறது. மேற் சொன்ன இந்த சூட்சுமமான பொருளின் ஆற்றல் தன்னுடைய உயர்ந்த மனவுறுதியை, நித்தியத்தின் சக்தியை அளிக்கும் வெண்ணிறப் பாலை அளித்து போஷிக்கிறது. அமுதினை அருந்திய குழந்தை மென்மேலும் பலம் பொருந்தியதாக, கடவுளைப் போன்று பலம் பெற்று வளர்கிறது.

அக்னி சூக்தங்களை ஸ்ரீஅரவிந்தர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். இந்த வேத சூத்திரங்கள் அக்னியை பெருமைப்படுத்தி பாடப்பட்டவை. அக்னி என்றால் ஜ்வாலை, இது நம் ஆர்வத்தைக் குறிக்கிறது, நம்முடைய பலத்தையும்

மனவுறுதியையும் குறிப்பாக உணர்த்துகிறது. *'Till it grows into the likeness of god'* என அவர் இங்கு குறிப்பிடுவது அக்னி தேவனை ஒத்தவனாக வளரும் வரை என்பதை குறிப்பாக உணர்த்துகிறது.

> In the Witness's occult rooms with mind-built walls
> On hidden interiors, lurking passages
> Opened the windows of the inner sight.
> He owned the house of undivided Time.

இப்பத்தியில் ஸ்ரீஅரவிந்தர் 'Witness' எனும் வார்த்தையை உபயோகிக்கிறார். அந்த W எனும் எழுத்து பெரிய எழுத்தில் Capital letterஆக உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. Witness என்றால் ஒரு நிகழ்வை தன் கண்ணால் பார்த்தவரைக் (சாட்சியை) குறிக்கிறது. ஏதேனும் விபத்து நடந்தால் காவல்துறை அலுவலர்கள் அந்த விபத்தினை நேரில் பார்த்த சாட்சியை, அதாவது மனிதரைத் தேடுவார்கள். ஆன்மிக வாழ்வில் நாம் சாட்சி நிலையிலேயே இருக்க முயற்சி செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. நம்முடைய எண்ணம், செயல், சொல் இவற்றிலிருந்து விடுவித்துக்கொண்டு நம்முடைய உணர்வின் ஆழத்திலிருந்து இவையனைத்தையும் சாட்சியாக நின்று கவனிக்க வேண்டும். நாம் என்ன செய்கிறோம், எத்தகைய எண்ணங்கள் நம்முள் வருகின்றன, நாம் எவ்வாறு நடந்து கொள்கிறோம், ஏன் அப்படி நடந்து கொள்கிறோம் என இவையனைத்தையும் மனதிலிருந்து நம்மை பிரித்துக்கொண்டு பின்னால் நின்று கவனிக்க வேண்டும். இவ்வாறு நாம் தொடர்ந்து பயிற்சி செய்யும் பொழுது நம் மனது சாட்சி நிலையை அடைகிறது. மேலும் அதிகமாக இதனைப் பயிற்சி செய்யும் பொழுது நாம் நம்முடைய உள்ளுணர்வுடன் ஒன்றிவிடுவோம். இந்த உள்ளுணர்வே அனைத்தையும் சாட்சியாக நின்று பார்த்துக் கொண்டேயிருக்கிறது, உலகத்தில் நடப்பவையனைத்தையும் பார்த்துக் கொண்டு அதற்கு உறுதுணையாக இருக்கிறது. இதனை நாம் "புருஷன்" என்கிறோம். இது "பிரகிருதி"க்கு எதிரானது, இயற்கையின் இயந்திரத்தன்மையான செயலாற்றலை இது குறிக்கிறது. "புருஷன்" இவ்வாறுதான் செயல்படுகிறான், அவன் பின்னால் நின்று கொண்டு, பிரகிருதியை, இயற்கையைச் செயல்பட விட்டுவிடுகிறான். நாம் புருஷன் எனக் குறிப்பிடும் பொழுது இது நம் செயல்களை வேறுபடுத்தி அதைப் பின்னாலிருந்து பார்க்கும் மனதின் பகுதியைக் குறிக்கவில்லை. ஆனால் நம்முள்ளே இருக்கும்

சாந்நித்யத்தை நம்மை எப்பொழுதுமே பார்த்துக்கொண்டிருக்கும் ஆழ்ந்த நிலையைக் குறிக்கிறது. இந்த சாட்சி புருஷன் அறைகளை, இரகசிய மறைவான அறைகளை தனதாகக் கொண்டது; இந்த அறையின் சுவர்களை மனதுதான் ஏற்படுத்தியது. இந்த சாட்சி புருஷன் மனது ஏற்படுத்தியிருக்கும் சுவர்களுக்குப் பின்னால் இருக்கிறது. நாம் இத்தகைய சாட்சி நிலையிலேயே பல காலம் இருந்தால், அதாவது மனதிலிருந்து பின்னால் விலகி இருக்க பயிற்சி செய்தால் அகக் கண் திறக்கும், ஜன்னல் திறப்பது போன்று திறக்கும், அப்பொழுது உட்பரப்புகளை, மறைந்திருக்கும் அகக்காட்சிகளை நாம் காண முடியும். "Interior" என்றால் உள்ளே என்பது பொருள். "Interior designer" எனும் சொல் நமக்கு அறிமுகமான ஒன்று. வீட்டிற்குள்ளேயும், அறைகளின் உள்ளேயும் எப்படி அழகுபடுத்துவது என்பதைக் கற்று நமக்கு ஆலோசனைகள் வழங்குபவரை நாம் "உட்புற வடிவமைப்பாளர்" (Interior designer) என அழைப்போம். ஆனால் இங்கு அகக்காட்சி திறக்கிறது, வெளியில் மட்டும் பார்க்காமல் மறைந்திருக்கும் உட்பகுதிகளையும் இப்பொழுது காண முடிகிறது.

மன்னர் அசுவபதி இப்பொழுது மறைந்திருக்கும் பாதைகளைப் பற்றி அறிந்தவராகிறார். "Lurking" எனும் சொல் இங்கு உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. இப்பாதைகள் மறைத்து வைக்கப்படவில்லை, அவை தங்களை மறைத்துக் கொண்டிருக்கின்றன, நம்மால் அறிய முடியாதபடி நம்முள்ளே ஆழத்தில் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவருடைய அகத்திலிருக்கும் இடம் ஒரு வீட்டைப் போன்றது. அவரே அவ்வீட்டிற்குச் சொந்தக்காரர். அவருடைய அகத்திலிருக்கும் வீட்டில் காலம் என்பது பிரிக்கப்படவில்லை. அதாவது கடந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என முக்காலங்களையும் சமமாகப் பார்க்கிறார் அதாவது "undivided time" என்கிறார். பின்னால் ஓரிடத்தில் அசுவபதியின் ஆன்மீக முன்னேற்றத்தைப் பற்றி விவரிக்கும் பொழுது அவர் "inidivisible" எனும் சொல்லை உபயோகிக்கிறார், காலத்தை பகுக்க முடியாது, நொடியாக, நிமிடங்களாக மணியாக பகுக்க முடியாது. அவருடைய அக திருஷ்டியால் முக்காலங்களையும் அவரால் சமமாகப் பார்க்க முடிகிறது.

Lifting the heavy curtain of the flesh
He stood upon a threshold serpent-watched,
And peered into gleaming endless corridors,
Silent and listening in the silent heart
For the coming of the new and the unknown.

தசைகளால் ஆன இத்தூல உடல் ஒரு கனமான திரையைப் போன்று வாசலை, நுழை வாசலை மறைக்கிறது. அசுவபதி அத்திரையை விலக்கி அதன் வாசலில நிற்கிறார். Threshold என்றால் வாசல்படி, வீட்டின் வெளிப்புறத்தையும் உட்புறத்தையும் இணைக்கும் இடம், இதன் வழியாகத்தான் நாம் வெளியிலிருந்து உள்ளேயும் உள்ளேயிருந்து வெளியே செல்லவும் முடியும். மேலும் இது மிகமிக முக்கியமானது. ஒரு வீட்டின் இந்த இரண்டு இடத்தையும் பிரித்துக் காட்டுவதும் இவ்வாசல்படியே. பல கலாச்சாரங்களிலும் இந்த வாசல் நிலை என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக, புனிதமான ஒன்றாகக் கருதப்படுகிறது. ஏனென்றால் நம் வீட்டிற்கு வரும் அனைவரையும் இவ்வாறு உள்ளே வர நாம் அனுமதிப்பதில்லை. இங்கு ஒரு நாகம் இந்த வாசல் நிலைக்கு பாதுகாவலனாக நிற்கிறது. சாவித்ரி தன்னுடைய யோகத்தின் தொடக்க காலத்தில் சூட்சும உலகில் நுழைய முயற்சிக்கும் பொழுது இந்த நாகம் படமெடுத்து எச்சரிக்கை செய்வதைப் போன்று சப்தம் செய்கிறது. இவ்வாறு நமக்குக் கூட ஏற்படலாம். நாம் இவ்வாறு சூட்சும உலகில் நுழைய விழையும் பொழுது இத்தகைய நாகத்தைப் பார்க்கக் கூடும் என்ற அவசியம் இல்லை. ஆனால் ஏதோ ஒன்று அங்கு ஓர் அபாயம் இருப்பதாக நம்மை பயமுறுத்துகிறது, நம்மை எச்சரிக்கிறது. சூட்சும உலகில் நுழைவதற்கு நாம் தயாராக இல்லை அல்லது நாம் இன்னும் தூய்மையடையவில்லை எனும் பொழுது இத்தகைய எச்சரிக்கை வருகிறது. சரியான தருணத்தில் நாம் இதனுள் நுழைய முடியும். இந்த நாகம் நம்மை எச்சரிக்கும் ஆனால் அந்த எச்சரிக்கையை ஏற்க வேண்டிய அவசியமில்லை. மன்னர் அசுவபதி சூட்சும உலகில் நுழையவில்லை அதன் நுழைவாயிலில் நிற்கிறார். அங்கு நின்று கொண்டு ஒளிரும் அகவுலகங்களை, முடிவற்ற அகவுலகங்களை ஒவ்வொன்றாகப் பார்க்கிறார். அவர் அங்கு அமைதியாக நின்று கொண்டு தன்னுடைய அமைதியான இதயத்தில் புதியதாக வருவதையும் அறியாத பல விஷயங்களையும் அவர் கேட்கிறார். என்னவெல்லாம் வருகிறது என கவனித்துப்

பார்த்துக் கொண்டிருக்கிறார். "Gleaming" மென்மையாக ஒளிர்வதை இங்கு குறிக்கிறது, இச்சொல் ஒளியைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படவில்லை. மெருகேற்றப்பட்ட உலோகங்கள், வெள்ளியினால் ஆன பொருட்கள் போன்றவை ஒளிர்கிறதல்லவா இதைத்தான் gleaming எனும் இச்சொல் குறிக்கிறது.

He gazed across the empty stillnesses
And heard the footsteps of the undreamed Idea
In the far avenues of the Beyond.

முதலில் அவர் ஒளிரும் முடிவற்ற தாழ்வாரங்களைப் பார்த்தார், அங்கு என்ன இருக்கிறது என்பதை பார்க்க முயற்சித்தார். ஆனால் இப்பொழுது அத்தாழ்வாரங்களின் காலியான அசையாத்தன்மையை கூர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறார். அத்தாழ்வாரங்களில் எதுவுமில்லை, யாரும் அங்கு காணப்படவில்லை, எந்த அசைவுமில்லை, ஆனால் அவர் தொலைவில் காலடி ஓசையைக் கேட்கிறார். எதன் காலடி ஓசை? கனவாகக் காணப்படாத கருத்துக்கள், எண்ணங்களின் காலடி ஓசைகள் - அற்புதமான புதியன படைக்கும் எண்ணங்கள் வேறொரு தளத்தில் நடமாடிக் கொண்டிருக்கின்றன, இத்தகைய கருத்துக்களைப் பற்றி நாம் எண்ணியதில்லை, கனவு கூட கண்டதில்லை. இப்புதிய ஆக்கபூர்வமான எண்ணத்தின் அசையும் ஓசை அவரை நெருங்கிக் கொண்டிருக்கிறது, அதனால்தான் அதனுடைய ஓசையை அவரால் கேட்க முடிகிறது. இத்தகைய கருத்துக்களின் ஓசைகள் இன்னும் இங்கு வெளிப்படாத நம்முடைய வெளிப்பரப்புகளைத் தாண்டி எங்கோ இருக்கிறது. Avenue என்றால் அகலமான தெருவை அல்லது பாதையைக் குறிக்கும்.

*(விளக்கம் தொடரும்)*

**சாவித்ரி பவனின் புதிய இணையதளம்**

**சாவித்ரி பவனைப் பற்றி மேலும் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய இணையதள முகவரி savitribhavan.org நீங்கள் சாவித்ரி பவனுக்கு அனுப்ப விரும்பும் செய்திகளையும் நன்கொடைகளையும் இந்த இணையதளம் மூலம் அனுப்பலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்..**

# சாவித்ரிபவன் செய்திகள்

*ஆகஸ்ட் 2013 முதல் டிசம்பர் 2013 வரை*

***சாவித்ரி பவனின் வாராந்திர வகுப்புகள்:***

*ஞாயிறுகாலை 10.30-12.00 மணி வரை சாவித்ரி குழு கற்றல்*

*திங்கள் மாலை 3-4 மணி வரை டாக்டர் ஜெய் சிங் அவர்களின் "யோகமும் மனிதனின் பரிணாம வளர்ச்சியும்"*

*மாலை 5-6 மணி வரை திரு.ஆனந்த ரெட்டி அவர்களின் "சாவித்ரியில் பூரண யோகம்"*

*செவ்வாய் காலை 9-10.30 மணி வரை பெட்ரீஷியாவின் "சாவித்ரியின் ஓசைகள்" ___ உச்சரிப்பை பயிற்றுவித்தல்*

*மாலை 3-4 மணிவரை டாக்டர் ஜெய் சிங் அவர்களின் "யோகமும் மனிதனின் பரிணாம வளர்ச்சியும்"*

*மாலை 4-5 மணி வரை அன்னையின் அஜெண்டாவிலிருந்து அன்னையின் ஒலிப்பதிவு செய்யப்பட்ட பேச்சினை கங்காலட்சுமியுடன் கேட்கலாம்.*

*மாலை 4.45-5.45 வரை ஆனந்தி வழங்கும் "முத்ரா-சி" வகுப்பு*

*மாலை 5-6 மணி வரை சுதர்சன் நடத்தும் சாவித்ரி தமிழ் வகுப்பு*

*மாலை 5.45-7.15 மணி வரை ஓம் மந்திரத்தை குழுவினர் இசைக்கக் கேட்கலாம்.*

*புதன் காலை 9-12.30 வரை ஆஷிஷ் ஜோஷியின் பூரண யோகப் பயிற்சிப் பட்டறை*

*மாலை 5.30-6.30 மணி வரை ஷரத்தாவன் நடத்தும்* "Reading the Life Divine" *வகுப்பு*

*வியாழன் மாலை 4-5 மணி வரை ஷ்ரத்தாவனின் சாவித்ரி ஆங்கில வகுப்பு.*

*வெள்ளி காலை 9-12.30 வரை ஆஷிஷ் ஜோஷியின் பூரண யோகப் பயிற்சிப் பட்டறை*

*மாலை 3-4 மணி வரை டாக்டர் ஜெய் சிங் அவர்களின் "யோகமும் மனிதனின் பரிணாம வளர்ச்சியும்"*

*மாலை 4-5 மணி வரை அன்னையின் அஜெண்டாவிலிருந்து அன்னையின் ஒலிப்பதிவு செய்யப்பட்ட பேச்சினை கங்காலட்சுமியுடன் கேட்கலாம்.*

சனி மாலை 4-5 மணி வரை அன்னையின் அஜெண்டாவிலிருந்து அன்னையின் ஒலிப்பதிவு செய்யப்பட்ட பேச்சினை கங்காலட்சுமியுடன் கேட்கலாம்.

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று ஸ்ரீஅரவிந்தரின் சிலை முன்பு சாவித்ரி வாசித்தலும் தியானமும் நடைபெறும்.

**ஆகஸ்ட்:**

1-31 **ஸ்ரீஅரவிந்தரின் சாவித்ரியில் வேதப் படிமங்கள்** எனும் சிவக்குமார் பாலியா அவர்களின் ஓவியக் கண்காட்சி நடைபெற்றது.

5 **'சாவித்ரியில்' அசுவபதியும் ஸ்ரீஅரவிந்தரும்:** ஜார்ஜ் வன் ரக்கம் அவர்களுடைய உரையின் வீடியோ இடம் பெற்றது.

12 "ஓர் இறை வாழ்வு" மற்றும் "எதிர்காலத்தைப் பற்றிய ஸ்ரீஅரவிந்தரின் தீர்க்க திருஷ்டியும்". இவ்விரண்டு திரைப்படங்களும் ஸ்ரீஅரபிந்தோ சொஸைட்டியின் ஆரோபிலிம்ஸால் தயாரிக்கப்பட்டது.

13 The Traveller and The Worlds – Part One of Sri Aurobindo's Savitri: டாக்டர் எம்.வி.நட்கர்னி அவர்களின் நான்காம் நினைவுச் சொற்பொழிவு - ஷ்ரத்தாவன் அவர்களின் உரை இடம் பெற்றது.

19 ஹூதா அவர்களின் ஓவியங்களைக் கொண்டு மனோகரால் தயாரிக்கப்பட்ட "ஸ்ரீஅரவிந்தரின் கவிதைகள் பற்றிய ஓவியங்கள்" திரைப்படம் திரையிடப்பட்டது.



ஸ்ரீஅரவிந்தர் வாழ்க்கை வரலாறு பற்றிய புகைப்படக் கண்காட்சி

24-30 'இரகசிய ஞானம்' சாவித்ரி பயிற்சி முகாம் நடைபெற்றது. குஜராத் மாநிலம், பரோடா மற்றும் அஹமதாபாத் ஸ்ரீஅரபிந்தோ சொஸைட்டி கிளைகளைச் சார்ந்த உறுப்பினர்கள் இதில் பங்கு பெற்றனர். முகாமை நடத்தியவர் ஷ்ரத்தாவன் அவர்கள்.

28 ஸ்ரீஅரவிந்த ஆசிரமத்தைச் சேர்ந்த திரு.மோகன் மிஸ்ட்ரி தனது குழுவினருடன் சாவித்ரி பவனிலுள்ள ஆம்பி தியேட்டரில் இன்னிசை வழங்கினார்.

**செப்டம்பர்:**

2 **அலெக்ஸாண்ட்ரா டேவிட் நீல்** எனும் திரைப்படம் திரையிடப்பட்டது. திபெத்திலுள்ள லாஸா எனும் இடத்திற்கு யாத்திரையாகச் சென்ற முதல் ஐரோப்பியப் பெண்மணி இவர். இப்பெண்மணி 1912 இல் ஸ்ரீஅரவிந்தரைச் சந்தித்தவர்.

9 புத்தமதத்தைப் பற்றிய மூன்று திரைப்படங்கள்: ஜென் மதத்தைப் பற்றி ஆலன் வாட்ஸ், புத்தமதத்தைப் பற்றி தலாய் லாமா ஆற்றிய உரையின் வீடியோ மற்றும் எப்பொழுதும் நிகழ்காலத்திலேயே வாழ்வதைப் பற்றியும் மனதைப் பற்றிய விழிப்புணர்வு பற்றியும் திச் ந ஹான் என்ற ஜென் மதத்தலைவரின் வீடியோ பேட்டியும் இடம் பெற்றது.

12-16 ஜே.வி.அவதானுலு அவர்களின் பிரணாயாமா பயிற்சிப் பட்டறை நடை பெற்றது.

20-22 ஜே.வி.அவதானுலு அவர்கள் நடத்திய "ஆரோக்கியமும் ஆனந்தமும்" பயிற்சிப் பட்டறை நடை பெற்றது.

30 **சாவித்ரியில் தியானம் : நூல் இரண்டு காதை 1-4** திரைப்படம் இடம் பெற்றது. ஹூதாவின் ஓவியங்களைக் கொண்டு மனோகர் தயாரித்த இத்திரைப்படத்தில் சாவித்ரி பத்திகளை அன்னை வாசிக்க அவருடைய ஆர்கன் இசைப் பின்னனியுடன் தயாரிக்கப்பட்டது இத்திரைப்படம்.

**அக்டோபர்:**

6 ஸ்ரீஅரவிந்தரின் யோகத்தை பயிற்சி செய்தல் - ஆரோவில்வாசிகளும் ஆரோவிலில் புதிதாக சேருபவர்களும் கலந்து கொண்ட ஒரு கலந்துரையாடல்.

7 நிரோத்பரன் நினைவு கூறும் விதமாக புது தில்லியிலுள்ள நாஸ்டிக் சென்டரால் (Gnostic Centre) 2007 இல் தயாரிக்கப்பட்ட திரைப்படம் இடம் பெற்றது.

14 *'அமல் கிரண் - ஒரு தெளிந்த ஒளிக்கதிர்' திரைப்படம் திரையிடப்பட்டது.*

21 *Diversity of Life, Unity of Spirit and Evolutionary Crisis: திரு. அரபிந்த பாசு அவர்களின் வீடியோ உரை இடம் பெற்றது.*

28 ***சாவித்ரியில் தியானம் : நூல் இரண்டு காதை 5 & 6** திரைப்படம் இடம் பெற்றது. ஹூதாவின் ஓவியங்களைக் கொண்டு மனோகர் தயாரித்த இத்திரைப்படத்தில் சாவித்ரி பத்திகளை அன்னை வாசிக்க அவருடைய ஆர்கன் இசைப் பின்னனியுடன் தயாரிக்கப்பட்டது இத்திரைப்படம்.*

**நவம்பர்:**

1-31 *ஸ்ரீஅரவிந்தர் வாழ்க்கை வரலாறு பற்றிய புகைப்படக் கண்காட்சி இடம் பெற்றது.*

4 ***ஸ்ரீஅரவிந்தரின் அன்னை பகுதி 1 —— அன்னை வாசிக்கிறார்:** ஸ்ரீஅரவிந்தர் எழுதிய **அன்னை** எனும் புத்தகம் பூரண யோகத்தைப் பற்றிய விவரங்களையும் பூரண யோகத்தை கடைபிடிப்பதற்கான வழிகாட்டுதல்களையும் கொண்டது. இத்திரைப்படத்தில் அன்னை இப்புத்தகத்தின் அத்தியாயம் 1 முதல் 5 வரை வாசிக்கிறார்.*

9 *நவம்பர் 9 ஆம் தேதி முதல் ஓம் மந்திரத்தை இசைப்பதற்காக குரல் பயிற்சி வகுப்பு துவங்கப்பட்டது.*

11 ***ஸ்ரீஅரவிந்தரின் அன்னை பகுதி 2 —— அன்னை வாசிக்கிறார் :** இத்திரைப்படத்தில் அன்னையின் நான்கு அம்சங்களைப் பற்றியும் மகேஸ்வரி மகாகாளி அம்சங்களைப் பற்றி விரிவாகவும் வாசிக்கிறார் அன்னை.*

12-16 *ஜே.வி.அவதானுலு அவர்கள் நடத்திய "ஆரோக்கியமும் ஆனந்தமும்" பயிற்சிப் பட்டறை நடை பெற்றது.*

18 ***'அன்னை —— பால்கனி தரிசனம் 1965-1973'** திரைப்படம் இடம் பெற்றது. சுதா சுந்தரம் அவர்கள் எடுத்த 106 புகைப்படங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது இத்திரைப்படம். இப்புகைப்படங்களை அன்னையே தெரிவு செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. சாவித்ரி பவனில் பணிபுரியும் தாத்தியானா இப்படத்தை தயாரித்திருந்தார்.*

25 ***சாவித்ரியில் தியானம் : நூல் இரண்டு காதை 7- 15** திரைப்படம் இடம் பெற்றது. ஹூதாவின் ஓவியங்களைக் கொண்டு மனோகர் தயாரித்த இத்திரைப்படத்தில் சாவித்ரி*

பத்திகளை அன்னை வாசிக்க அவருடைய ஆர்கன் இசைப் பின்னனியுடன் தயாரிக்கப்பட்டது இத்திரைப்படம்.

**டிசம்பர்:**

1-10 ஸ்ரீஅரவிந்தர் தம்முடைய உடலை நீத்ததை நினைவு கூறும் பொருட்டு ஒரு கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஸ்ரீஅரவிந்தரின் சமாதிநிலையிலுள்ள புகைப்படங்களும் அது சம்பந்தமான தொகுப்பும் வைக்கப்பட்டிருந்தன.

2 **ஸ்ரீஅரவிந்தரைப் பற்றி அன்னை** எனும் திரைப்படம் திரையிடப்பட்டது.

9 13 ஆகஸ்ட் 2013 அன்று ஷ்ரத்தாவன் அவர்கள் நிகழ்த்திய டாக்டர் எம்.வி. நட்கர்னி நான்காம் நினைவுச் சொற்பொழிவின் வீடியோ இடம் பெற்றது.

16 **வீடு** ___ நமது பூமியைப் பற்றிய திரைப்படம் - பூமியே நமது வீடு - இது ஓர் அற்புதம், அழகு. ஏன் ஆர்தஸ் பெர்ட்ராண்ட் அவர்களால் தயாரிக்கப்பட்ட திரைப்படம் இது.

23 **'மார்ட்டன் லாரிட்ஸன் - ஒளிரும் இரவு'** ஒரு மாபெரும் இசைக்கலைஞனைப் பற்றிய திரைப்படம் இடம் பெற்றது.

30 **சாவித்ரியில் தியானம் : நூல் மூன்று இறை அன்னையின் நூல் காதை 1-4:** திரைப்படம் இடம் பெற்றது. ஹூதாவின் ஓவியங்களைக் கொண்டு மனோகர் தயாரித்த இத்திரைப்படத்தில் சாவித்ரி பத்திகளை அன்னை வாசிக்க அவருடைய ஆர்கன் இசைப் பின்னனியுடன் தயாரிக்கப்பட்டது இத்திரைப்படம்.



ஸ்ரீஅரவிந்தர் தம்முடைய உடலை நீத்ததை நினைவுகூறும் கண்காட்சி



*"ஸ்ரீஅரவிந்தரின் சாவித்ரியில் வேதப் படிமங்கள்" சிவக்குமார் பாலியா அவர்களின் ஓவியக் கண்காட்சி.*

## சாவித்ரி பவன் எனும் கனவு

ஆரோவிலில் ஒரு சூழலைப் பற்றிய எங்கள் கனவு அது

சாவித்ரியே அதன் மூச்சு

உலகின் அனைத்து பாகங்களிலிருந்து வரும் சாவித்ரி அன்பர்களை அது வரவேற்கும்

சாவித்ரி ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் மையமாக அது விளங்கும்

ஸ்ரீஅரவிந்தரின் சத்தியப் பெருவெளிப்பாடான சாவித்ரி எனும் மகாகாவியத்தை அனுபவிக்க, புரிந்து கொள்ளத் தேவையான அனைத்து நூல் குறிப்புகளையும் செயல்பாடுகளையும் தன்னகத்தே கொண்டிருக்கும்

சூரியனிடமிருந்து வெளிப்பட்ட உண்மை எனப்படும் சாவித்ரி பரிமளிக்கும் பவனமாக விளங்கும்.

## சாவித்ரி பவன் பணிகளுக்கு எவ்வாறு உதவலாம்

சாவித்ரி பவன் நன்கொடைகளையும் நல்லெண்ணம் கொண்டோரின் பொருளுதவியையுமே சார்ந்திருக்கிறது. சாவித்ரி பவன் கனவு நனவாக தாங்கள் கீழ் கண்ட ஏதேனும் ஒரு முறையில் தங்களுடைய நன்கொடைகளை அனுப்பலாம்.

**கிரெடிட் கார்டு / டெபிட் கார்டு** மூலம் நன்கொடைகளைச் செலுத்த விரும்புவர்கள் www.auroville.com/donations எனும் இணையதளம் மூலம் தாங்கள் விரும்பும் நன்கொடைகளை அனுப்பலாம். ரூ.500லிருந்து ரூ.10,000 வரை இதன் மூலம் அனுப்ப முடியும். பெறுபவர் (recipient) எனும் இடத்தில் Savitri Bhavan எனக் குறிப்பிடவும்.

**காசோலைகள் அல்லது வரைவோலைகள்**

காசோலைகள் மற்றும் வரைவோலைகள் Auroville Unity Fund (SAIIER) எனும் பெயருக்கு எடுக்கப்பட்டு கீழ்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

**நீங்கள் இந்தியாவில் வசிப்பவராக இருந்தால்**

- உங்கள் காணிக்கைகளை இணையதள வங்கி வசதிகள் மூலமாகவோ அல்லது நேரிடையாகவோ செலுத்த விரும்பினால் **(Direct transfer) State Bank of India: Branch Code No.03160: Current account no. 10237876031; வருமான வரிச் சட்டம் செக்ஷன் 35(i)(iii) கீழ் 100% வரி விலக்கு பெற விரும்புவோர் Current account no. 31612623238**ஐ உபயோகப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் நன்கொடைகளை இவ்வாறு அனுப்பும்பொழுது அதை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம். பின் இதனை வங்கியில் சரிபார்த்து உடனடியாக அதற்கான இரசீதை எங்களால் அனுப்ப முடியும்.

- ரூ.500 அல்லது அதற்குக் குறைவாகவோ அனுப்பினால் அதை M.O. அல்லது D.D. மூலம் அனுப்ப வேண்டுகிறோம். வெளியிடங்களிலிருந்து காசோலைகள் மூலம் அனுப்பினால் அதைப் பெறுவதற்கு அதிக அளவு செலவாகிறது. மாதந்தோறும் சிறு நன்கொடை அனுப்புபவர்கள் மூன்று மாதத்திற்கொருமுறை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.


எல்லாத் தொடர்புகளுக்கும்

**சாவித்ரி பவன்**

**ஆரோவில் - 605101, தமிழ்நாடு**

**தொலை பேசி: 0091(0)413-2622922**

**மின்னஞ்சல்: savitribhavan@auroville.org.in**

**இணையதள முகவரி: www.savitribhavan.org**



சாவித்ரி பவன் SAIIER செயற்திட்டத்தின் கீழ் இயங்குகிறது.
(ஸ்ரீ அரபிந்தோ பன்னாட்டுக் கல்வி ஆராய்ச்சி மையம்)

“சாவித்ரி
உலகின்
திருஉருமாற்றத்திற்கான
மந்திரம்”

அன்னை